விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

VIJEAY Complex
www.vijeaycomplex.com
உங்கள் அனைத்து மங்கள நிகழ்வுகளையும்
கொண்டாடி மகிழ்ந்திட எம்மைத்
தொடர்பு கொள்ளுங்கள்.
0033687713427
021 221 2899/077 723 0104/077 449 6386
No.199, Chundikuli - Columbuthurai Road, Jaffna.
(7294)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 15 சனிக்கிழமை (31.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 224

### அதிகரிக்கும் தொற்றாளர்கள்
## 2,455 பேருக்கு நேற்றும் கோவிட்

(கொழும்பு)
கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 2,455 பேர் நேற்று 19

## 4 தமிழ் அரசியல் கைதிகள் நீதிமன்றத்தினூடாக விடுதலை

(வவுனியா)
பல ஆண்டுகளாக சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் நான்கு பேர் தமது வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் நிரபராதிகள் என இனங்காணப்பட்டதையடுத்து நேற்று வவுனியா மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக "குரலற்றவர்களின் குரல்" அமைப்பின் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

அநுராதபுரம் 19

### காங்கேசன்துறையில்
## 9 பொலிஸாருக்கு கொரோனா


(யாழ்ப்பாணம்)
யாழ்.காங்கேசன்துறையில் உள்ள வடமாகாண பொலிஸ் தலைமை அலுவலகத்தில் 9 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 19

### கொரோனாவால்
## மேலும் ஒருவர் யாழில் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த யாழ்ப்பாணம் சந்திரமாதா 19

### தெற்கிலிருந்து வடக்குக்கு நுழைந்தவர்களை
# வழிமறித்து பரிசோதனை
# 22 பேருக்கு கொரோனா



### எழுமாற்றுப் பரிசோதனையில் அடையாளம்

(கொழும்பு)
**தென்பகுதியில் இருந்து வடக்குக்கு நுழைந்தவர்களை வழிமறித்து மேற்கொண்ட பிசிஆர் பரிசோதனையில் 22 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

தென் பகுதியில் இரவு வேளைகளில் வடக்குக்கு வருபவர்களை வவுனியா ஏ9 வீதிநுழைவாயிலான மூன்று முறிப்பு பகுதியில் வழிமறித்த சுகாதாரப் பிரிவினர் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 5.30 வரை 300 19

### கோவிட் தடுப்பூசி பெற்றவர்களே
## அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களுக்கு செல்ல முடியும்
### எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)
எதிர்காலத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களுக்கு வருகைதரும் மக்கள், தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் என்பதனை உறுதிப்படுத்தும் அட்டையைத் தம்வசம் வைத்திருப்பதை கட்டாயமாக்குவது குறித் 19

### உடன் அமுலுக்கு வரும்வகையில்
## சரத் வீரசேகரவிடமிருந்து இரு நிறுவனங்கள் பறிப்பு
### ஜனாதிபதி அதிரடி நடவடிக்கை



(கொழும்பு)
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகரவுக்கு கீழிருந்த 19

### யாழில் 62 பேர் உட்பட
## வட மாகாணத்தில் 80 பேருக்கு கோவிட்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த 62 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 80 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு 19

## கொரோனா தடுப்பூசி பெறாதவர்கள் தொடர்பில் கணிப்பீடு நடத்துங்கள்
### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)
இதுவரையில் கோவிட் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் தொடர்பில் கணக்கெடுப்பொன்றை நடத்துமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு 19

### யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில்
## 25 மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று
### அனைவரும் இரு தடுப்பூசிகள் பெற்றவர்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ்.தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் தொற்றுக்குள்ளான மாண 19

### வேலணையில்
## 34 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் தீவகம் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரு [illegible] 19

### கோவிட் தொற்றால்
## நாட்டில் மேலும் 56 பேர் மரணம்

(கொழும்பு)
கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 56 பேர் மரணித்துள்ளதாக 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## முறையாக பிசிஆர் பரிசோதனை செய்தால்
# 4 ஆயிரம் டெல்டா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவார்கள்
### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

முதல் இரண்டு கோவிட் வைரஸ் அலைகளை விடவும் தற்போது மோசமான நிலையொன்று நாட்டில் காணப்படுவதாகவும், நாடு அச்சுறுத்தல் நிலையின் ஆரம்ப கட்டத்தில் உள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

முறையாக பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுத்தால் நாட்டில் தற்போது வரையில் நான்காயிரத்திற்கும் அதிகமான டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

நாட்டில் டெல்டா வைரஸ் பரவல் அதிகரிப்பை வெளிப்படுத்தி வருவதாகவும், அச்சுறுத்தல் நிலையொன்றில் நாடு உள்ளதாகவும் சுகாதார, மருத்துவ அதிகாரிகள் தெரிவித்து வருகின்ற நிலையில் உண்மை நிலையை குறித்து வினவிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொவிட் -19 வைரஸ் பரவலில் உச்சகட்ட வைரஸாக அடையாளம் காணப்படும் டெல்டா வைரஸ் பரவல் வேகமாக பரவிக் கொண்டுள்ளது. நாடு தற்போது பாதுகாப்பான நிலையில் இல்லை என்பதையே எம்மால் கூற முடியும். அதே நேரம் தடுப்பூசிகள் ஏற்றும் வேலைத் திட்டம் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.

(ம-03)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம்) திருமதி சாந்தினிமாலா தர்மராஜன் அவர்களின் அன்புக் கணவர்

**அமரர் செல்லத்துரை தர்மராஜன்**

அவர்கள் 29.07.2021 அன்று இறையடி சேர்ந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணம்
வலயக்கல்வி அலுவலகம்.

(C-2443)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வீதியால் சென்ற இளைஞனை வாகனத்தில் கடத்திச்சென்று கோப்பாய் பொலிஸார் தாக்குதல்
### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

வீதியால் சென்ற தன்னை கோப்பாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாகனத்தில் கடத்தி சென்று, கைத்துப்பாக்கியால் தாக்கி, வீதியில் வீசிவிட்டு சென்றதாக இளைஞன் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்றைய தினம் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

தான் வீதியால் சென்று கொண்டிருந்தபோது மது போதையில் ஹயஸ் ரக வாகனத்தில் வந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடத்திச்சென்று வாகனத்தினுள் வைத்து கைத்துப்பாக்கியால் தாக்கி சில கிலோ மீற்றர் தூரம் கொண்டு சென்று வீதியில் வீசிவிட்டு சென்றனர் என பாதிக்கப்பட்ட இளைஞன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த ஒரு வார கால பகுதிக்குள் கோப்பாய் பொலிஸாரினால் மனிதவுரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நான்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழு, பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் விளக்கங்கள் கோரப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டு உள்ள போதிலும், கோப்பாய் பொலிஸாரின் மனிதவுரிமை மீறல்கள் தொடர்ந்து கொண்டே உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ம-03,33)

## வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு
### கோவிட் தடுப்பூசி சான்றிதழ்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு கோரிக்கையின் பேரில் கோவிட் தடுப்பூசி சான்றிதழ் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது.

தடுப்பூசி அட்டை, கடவுச்சீட்டு மற்றும் தேவையான பிற ஆவணங்களை தனி நபர் சமர்ப்பித்தவுடன் சான்றிதழை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினூடாக வழங்கப்படும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும், விசேட வைத்திய நிபுணருமான ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டார்.

(ம-03)



## இந்து பௌத்த கலாசார பேரவையின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், 12ஆம் வருட பூர்த்தி நிகழ்வும்! புதிய கட்டடத் திறப்புவிழாவும்!



இந்து பௌத்த கலாசார பேரவையினால் வடமாகாணத்தில் புதிய காரியாலய கட்டடத் தொகுதியானது இல. 09, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் 30.07.2021 முற்பகல் 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது. மேலும் 12ஆம் ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வும் இடம்பெற்றது. யாழ். நகர மத்தியில் புதிதாக அமைக்கப்பட்ட இக்காரியாலயம் இரண்டாம் மொழிக்கான தொடர்ச்சியான சேவையில் ஈடுபடும். இக்காரியாலயத்தினை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் பிரதம மந்திரி, தென்னிலங்கையை சேர்ந்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பௌத்த குருமார்கள், சைவ குருமார்கள் மற்றும் பிரமுகர்கள் பலர் (ZOOM) ஊடாக வருகைதந்து வாழ்த்தினார்கள்.

இதுவரை எமது நிறுவனத்தில் 23,000 மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர். அதில் இன்றையதினம் கோவிட் - 19 காரணமாக 23 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் பிற்பகல் 2.00 மணியளவில் இனிதாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் உயர்திரு. ம.பிரதீபன் மற்றும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் உயர்திரு.செ.உதயகுமார் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மேலும் 813 மாணவர்களுக்கான சான்றிதழ்களும் தொடர்ந்து வருகின்ற நாட்களில் வழங்கப்படவுள்ளன. இந் நிகழ்வில் (ZOOM) ஊடாக இணைந்துகொண்ட வண. அத்துரலிய ரத்ன தேரர் அவர்கள் இரண்டாம் மொழிக் கற்கையின் தேவையினை உணர்ந்து இந்து பௌத்த கலாசார பேரவையினை சிறப்பாக தொடர்ந்து நடாத்தி செல்வதையிட்டு தேசமான்ய எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் அவர்களை பாராட்டினார்.

### வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்ன தேரரிடம் இருந்து



*இதுவரை ஆசிரியர் பயிற்சி நெறியினை நிறைவுசெய்த 100 ஆசிரிய மாணவர்களுக்கான ஆசிரியர் நியமனம் வருகின்ற மாதத்தில் வழங்கப்படவுள்ளது என்பதனை உறுதிசெய்கின்றேன். கோவிட் -19 நோயின் தாக்கம் குறைந்த பின்னர் யாழ். மாவட்டத்திற்கு வருகைதந்து விவசாயிகள், இளைஞர், யுவதிகள் மற்றும் மாணவர்களுக்கு 05 நாட்கள் கொண்ட பயிற்சிப் பட்டறையினை நடாத்த உள்ளேன். பலநாடுகளில் பௌத்தம் தமிழர்களின் ஊடாகத்தான் பின்பற்றப்படுகின்றது. உதாரணமாக சீன நாட்டில் பௌத்தம் போதித்த போதிதர்மரை குறிப்பிடலாம். அவ்வாறு இலங்கைதீவிலும் தமிழர் சிங்களவரிடையே இன நல்லிணக்கம் ஏற்படவேண்டும்.*

### பேராசிரியர் சி.சற்குணராஜா அவர்களிடமிருந்து



*அரசாங்க நிறுவனங்களில் ஒன்றான இந்து பௌத்த கலாசார பேரவையினை திறம்பட அரசாங்க மாறுதல்களுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக நடாத்தி செல்லும் தேசமான்ய எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் அவர்களின் பணிகளை பாராட்டுகின்றேன். நீங்கள் திறமையானவர்களாக செயற்பட உங்களுக்கு பலமொழி அறிவு அவசியம். எமக்கு உதவிக்கு என்றும் அயலவனே வருவார். எனவே நாமும் எமது அயலவரான சிங்கள சகோதரர்களையும் நேசிக்கவேண்டும்.*

### மேலதிக அரசாங்க அதிபர் உயர்திரு. ம.பிரதீபன் அவர்களிடமிருந்து



*இலவச கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கும்போது நிதி என்பது ஒரு பாரிய சவாலாக காணப்படும். அவ்வாறான சவால்களையும் தாண்டி இவ்இரண்டாம் மொழி செயற்பாட்டை முன்னெடுத்து செல்லும் தேசமான்ய எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் அவர்களுக்கு இச்சமூகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.*

### வடமாகாண கல்விப் பணிப்பாளர் உயர்திரு. செ.உதயகுமார் அவர்களிடமிருந்து



*தனி ஒருமனிதராக பல இடர்பாடுகளுக்கு மத்தியில் தமிழ் சமூகத்தின் நலனை கருத்தில் கொண்டு சிங்கள மொழி கற்பித்தலை இன நல்லிணக்கத்திற்கான அடிப்படையாக பயன்படுத்திவரும் தேசமான்ய எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் அவர்களை பாராட்டுகின்றேன்.*

*இறுதியாக இந்நிகழ்வில் (ZOOM) ஊடாக இணைந்து சிறப்பித்த பிரதம மந்திரி, பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்து குருமார்கள், சிவசேனை அமைப்பின் உறுப்பினர் மற்றும் நேரடியாக இந் நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*





மயில்வாகனம் சுமெக்ஸ்சன் [B.A, B.Com,CIMA(Reading)
இந்து பௌத்த கலாசார பேரவையின் கற்பித்தல் ஆலோசகர்.

(7502)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் உருவாகும் கொத்தணிகள்; கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

**(யாழ்ப்பாணம்)**

**கடந்த இரண்டு வாரங்களாக வடக்கு மாகாணத்தில் உள்ள சில ஆலயங்களில் சிறிய கொத்தணிகள் உருவாகி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே வடக்கு மாகாண பொதுமக்கள் இந்த கொரோனா ஒழிப்பு செயற் பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**



வடக்கு மாகாணத்தில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் முதலாம் கட்ட தடுப்பூசியினை பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் தற்போது 30 வயதுக்கு மேற்பட்டோர் சினோபார்ம் தடுப்பு ஊசி ஏற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த அடிப்படையில் நேற்று முன்தினம் வடக்கு மாகாணத்தில் 40 ஆயிரத்து 391 பேருக்கு இந்த தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் 6 இலட்சத்து 57 ஆயிரத்து 547 பேர் இருக்கிறார்கள்.

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட 35 வீதமான 30 வயதிற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி நேற்றுவரை வழங்கப்பட்டுள்ளது.

அநேகமாக ஓகஸ்ட் மாத நடுப் பகுதிக்கு முன்னர் வட மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கக் கூடியதாக இருக்கும்.

கடந்த இரண்டு தினங்களாக தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இறப்புகளும் அதிகரித்து வருகின்றன. பல மாகாணங்களில் இறப்பு அல்லது தொற்று வீதம் மிக தீவிரமாக காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்திலும் நேற்று முன்தினம் 104 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த சூழ்நிலையில் தொற்றுப் பரம்பலை கட்டுப்படுத்துவதற்கும் இறப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கும் மூன்று வழிகள் காணப்படுகின்றன.

இயலுமானவரை விரைவாக தடுப்பூசிகளை கூடுதலான மக்களுக்கு பெற்றுக் கொடுப்பது, இரண்டாவது பொது மக்கள் கூடுகின்ற இடங்களில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுதல், மூன்றாவது பொது மக்கள் ஒன்றுகூடுவதை இயலுமானவரை தவிர்த்தல் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களாக வடக்கு மாகாணத்தில் உள்ள சில ஆலயங்களில் சிறிய கொத்தணிகள் உருவாகி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே வடக்கு மாகாண பொதுமக்கள் இந்த கொரோனா ஒழிப்பு செயற்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (நி-5-33-18)

# அடுத்த வாரம் முதல் அரச நிறுவனங்கள் வழமைக்கு

(கொழும்பு)

கொவிட் வைரஸ் பரவல் காரணமாக தடைப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகள் அடுத்த வாரம் முதல் வழமைக்கு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரச நிறுவனங்களின் செயற் பாடுகள் அடுத்த திங்கட்கிழமை முதல் வழமையைப் போன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்தார்.

இதற்கான சுற்றறிக்கை வெளியிடப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையில் கட்டுப்பாடுகள் நீடித்தாலும் அனைத்து அதிகாரிகளும் கட்டாயம் அன் றைய தினம் முதல் பணிக்கு வர வேண்டும் எனவும் கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அரச நிறுவனங்களின் நடவடிக்கைகள் வழமையை போன்று மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொவிட் தொற்று காரணமாக அரச நிறுவனங்களில் அத்தியாவசிய பணிகளுக்கு மாத்திரம் ஊழியர்களை அழைக்கும் அதிகாரம் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கான சுற்றறிக்கை கடந்த மே மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



இலங்கையின் தேசிய விளையாட்டுத் தினத்தினை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் யாழ்.மாவட்டச் செயலக முன்றலில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் கொவிட் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகத் தேசிய விளையாட்டுத் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.
(படம்:-ரவிசாந்)



அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்க கோரியும், கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்தை திரும்பப் பெறுமாறும் வலியுறுத்தி பதுளை நகலில் போராட்டங்கள் இடம்பெற்றன்.
குறித்த போராட்டத்தை நேற்று பதுளை நகரிலும் ஊவா மாகாண சபைக்கு முன்பாகவும் பண்டாரவளை நகரில் ஆசிரியர் சங்கங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவில் இருந்து மேலும் ஆயிரத்து 716 பேர் பூரண குணமடைவு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் ஆயிரத்து 716 பேர் பூரண குணமடைந்து நேற்று வெள்ளிக்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 75 ஆயிரத்து 212 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் 3 இலட்சத்து 4 ஆயிரத்து 202 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 324 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா தடுமாற்றம்

# தொடரை வென்றது இலங்கை அணி!




இந்திய அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான இருபது-20 போட்டியில், இலங்கை கிரிக்கெட் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை கிரிக்கெட் அணி கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் 1-1 என சமனிலை அடைந்த நிலையில், தொடரினை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்றது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் ஓவரிலேயே தனது முதல் விக்கெட்டை இழந்தது.

இறுதியில் இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 81 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்போது இலங்கை அணியின் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 4 விக்கெட்டுகளையும் தசுன் சானக 2 விக்கெட்டுகளையும் துஸ்மந்த சமீர மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

குறிப்பாக இப்போட்டியில் துடுப்பாட்டத்தில் தடுமாறிய இந்தியா, மிகக் குறைந்த 10 ஓவர்களுக்கான ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்தது.

இதனைத்தொடர்ந்து 82 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 14.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இதன்போது இலங்கை அணி சார்பில், அவிஷ்க பெர்னாண்டோ 12 ஓட்டங்களையும் மினோத் பானுக 18 ஓட்டங்களையும் சதீர சமரவிக்கிரம 6 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தனஞ்சய டி சில்வா 23 ஓட்டங்களுடனும் வனிந்து ஹசராங்க 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ராகுல் சஹார் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக நான்கு ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்திய வனிந்து ஹசராங்க தெரிவு செய்யப்பட்டார். (4-6)

## குர்ணால் பாண்ட்யாவை தொடர்ந்து மேலும் இரு வீரர்களுக்கு கொரோனா



இலங்கை வந்துள்ள இந்திய அணியில் இடம்பெற்றுள்ள மேலும் இரண்டு இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது.

ஷிகர் தவான் தலைமையிலான இந்திய அணி இலங்கைக்கு எதிரான இருபது-20 தொடரை 2-1 என்ற கணக்கில் இழந்தது.

முதல் 20 ஓவர் போட்டியில் இந்திய அணி 38 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஒரு நாள் தொடரைப் போலவே இருபது-20 தொடரையும் இந்திய அணி கைப்பற்றி விடும் என்ற எதிர்ப்பார்ப்பு இருந்தது.

இந்த நிலையில் 2 ஆவது போட்டி நடைபெறும் நாளின் போது குர்ணால் பாண்ட்யாவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனால் 2 ஆவது போட்டி அடுத்த நாளுக்கு மாற்றி அமைக்கப்பட்டது.

மேலும் குர்ணால் பாண்ட்யாவுடன் தொடர்பில் இருந்த தீபக் சஹார், இஷான் கிஷன், மனிஸ் பாண்டே, ஹர்திக் பாண்ட்யா, சூர்யா குமார் யாதவ், பிரத்வி ஷா, யுஸ்வேந்திர சாஹல், கிருஷ்ணப்பா கவுதம் ஆகியோர் தனிமைப்படுத்தப் பட்டனர்.

இதனையடுத்து முக்கிய வீரர்கள் இன்றி விளையாடிய இந்திய அணி, அடுத்து 2 போட்டிகளிலும் தோல்வி அடைந்து தொடரையும் இழந்தது.

இந்நிலையில், குர்ணால் பாண்ட்யாவுடன் தொடர்பில் இருந்த 8 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்ததில் யுஸ்வேந்திர சாஹல் மற்றும் கிருஷ்ணப்பா கவுதம் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.(4-6)


## செப்டெம்பரில் இலங்கை வரும் தென்னாபிரிக்க அணி

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரையறுக்கப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியானது இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை வரும் தென்னாபிரிக்க அணி மூன்று ஒருநாள் மற்றும் மூன்று இருபது-20 போட்டிகளில் இலங்கையுடன் பலப்பரீட்சை நடத்தும்.

இந்த தொடரின் ஆட்டங்கள் அனைத்தும் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் பாதுகாப்பு விதிமுறைகளுடன் நடைபெறவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் உறுதிப்படுத்தியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான ஒருநாள் தொடரின் முதல் போட்டி செப்டெம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாகும். (4-6)



## உளவியல் பிரச்சினைகளில் ஒலிம்பிக் வீரர்கள்

டோக்கியோ ஒலிம்பிக்கில் தனிமைப்படுத்தல் மற்றும் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் இல்லாததோடு மைதானத்தில் வீரர்களை உற்சாகப்படுத்த பார்வையாளர்களும் இல்லாத காரணத்தினால் விளையாட்டு வீரர்களின் மன ஆரோக்கியம் பாதித்துள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன.

இதில் வீரர் உலகளாவிய விளையாட்டு அரங்கில் தங்கள் நாட்டின் நம்பிக்கையை சுமந்து கொண்டு தொற்று நோயால் ஏற்படும் சவால்களை சமாளிக்க போராடி வருகின்றனர்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் மகளிர் ஜிம்னாஸ்டிக்ஸ் குழு நிகழ்விலிருந்து சிமோன் பைல்ஸ் அதிர்ச்சி தரும் வகையில் வெளியேறிய பிறகு, உலகின் பாரத்தை தன் தோள்களில் சுமந்து கொண்டிருப்பதாக உணர்ந்ததாக கூறினார். கொரோனா தொற்று நோயுடன் பிணைக்கப்பட்ட ஒரு வருட காலம், இழப்பு மற்றும் கட்டுப்பாடுகளால் அந்தச்சுமை அதிகரித்ததாகத் தெரிவித்தார்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் எந்தவொரு வீரருக்கும் அவர்களின் குடும்பத்தினர் நண்பர்கள் டோக்கியோவில் விளையாட்டரங்கிற்கு வந்து அவர்களை உற்சாகப்படுத்த முடியாது. அத்தோடு வீரர்களின் போட்டிகள் தவிர்ந்த அனைத்து நடவடிக்கைகளும் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

டோக்கியோவுக்கு வருவதற்கு முன்பே, விளையாட்டு வீரர்கள் தொற்று நோயுடன் தொடர்புடைய புதிய மற்றும் அறிமுகமில்லாத அழுத்தங்களை எதிர்கொண்டனர். அவர்கள் ஊரடங்கு காலத்தின் போது பயிற்சியளிப்பதற்கான வழிகளைக் கண்டுபிடித்து, உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வுக்கு தகுதிபெற வேண்டியிருந்தது.

இதில் ஜிம்னாஸ்டிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ரஷ்ய வீராங்கனை ஏஞ்சலினா மெல்னிகோவா கூறுகையில், இது மிகவும் கடினமான பாதையாகும். தொற்றுநோய் காரணமாக விளையாட்டு ஒத்திவைக்கப்பட்டது என்று நாங்கள் அறிந்ததும், எங்கள் பயிற்சி தளம் மூடப்பட்டது. நாங்கள் ஒன்றரை வருடங்கள் தனிமைப் படுத்தப்பட்டிருந்தோம் என்று தெரிவித்தார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு தடுப்பூசிகளை பெற்றாலும்

# சுகாதார விதிமுறைகளை கடைப்பிடியுங்கள்

## கொரோனாத் தொற்றை குறைக்க இதுவே வழி என்கிறார் சுதர்ஷினி

**(கொழும்பு)**

**இரண்டு டோஸ் தடுப்பூசி பெற்றுக்கொண்ட பிறகும் முகக்கவசம் அணிய மறக்கவேண்டாம் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே கேட்டுக் கொண்டார்.**



கொழும்பில் நேற்று ஊட கங்களுக்கு கருத்து வெளி யிட்ட அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடு களில் தடுப்பூசி செலுத்தப் பட்ட பின்னர் முகக்கவசம் அணியத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டது.

எனினும், தற்போது அங்கு கொரோனாத் தொற் றாளர்கள் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வரு கின்றது. அதனையடுத்து, மீண்டும் முகக்கவசம் அணி வது கட்டாயமாக்கப்பட்டுள் ளது.

எனவே, இரண்டு டோஸ் தடுப்பூசி பெற்றுக்கொண்ட பிறகும் முகக்கவசம் அணிய மறக்க வேண்டாம்.

முகக்கவசம் அணியும் வரை, மீற்றர் இடை வெளியை கடைப்பிடிக்கும் வரை, மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு செல் வதை முடிந்தளவு தவிர்க் கும் வரை கொரோனாத் தொற்று ஏற்படும் அபாயம் குறைவாகவே காணப்ப டும்" என்று அவர் தெரிவித் தார். (நி-5)

# இறக்குவானையில் மேலுமொரு 80 கிலோ நீல மாணிக்கக்கல்

(கொழும்பு)

இரத்தினபுரி - இறக்கு வானை பகுதியில் 80 கிலோ கிராம் நிறையுடைய நீல மாணிக்கக்கல்லொன்று நேற்று வெள்ளிக் கிழமை கண்டு பிடிக் கப்பட்டுள்ளது.

குறித்த நீல மாணிக்கக்கல் கொழும்பிலுள்ள வியாபாரி ஒருவரிடமிருந்து, பரிசோத னைக்காக தேசிய மாணிக் கக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையிடம் கையளிக் கப்பட்டுள்ளது.

இந்த மாணிக்கக்கல்லின் பெறுமதியை மதிப்பிட்ட பின் னர், எதிர்வரும் நவம்பர் மாத மளவில் சர்வதேச மாணிக் கக்கல் ஏலத்திற்கு விடுவதாக தங்க ஆபரண அதிகார சபை அதிகாரிகள் அதனை பெற்றுக் கொண்ட நபரிடம் உறுதிய ளித்துள்ளனர்.

கடந்த வாரம் 510 கிலோ கிராம் எடையுடைய உலகின் மிகப்பெரிய நட்சத்திர நீலக் கல் ஒன்று இரத்தினபுரி பகுதியில் கிணறு தோண்டியபோது கண் டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (நி-5)

# தேவை ஏற்பட்டால் கட்சி தாவுவேன்

## ராஜித சேனாரட்ன

(கொழும்பு)

தேவை ஏற்பட்டால் கட்சி தாவுவேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான ராஜித சேனா ரட்ன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசியல்வாதி ஒருவருக்கு மிகவும் முக்கியமானது அரசி யல் கட்சி கிடையாது எனவும் அரசியல் கொள்கைகளே முத னிலையானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசியம் எனக் கரு தினால் தாம் இன்னொரு கட் சிக்கு தாவ நேரிடும் என அவர் குறிப்பிட்டார்.

தாம் காலத்திற்குக் காலம் அரசியல் கட்சிகளை பிரதி நிதித்துவம் செய்தாலும் தமது சோசலிசக் கொள்கைகளை மாற்றிக் கொண்டதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# கொரியாவில் வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி பண மோசடி

## -இருவர் கைது-

(கொழும்பு)

கொரியாவில் வேலைவாய் ப்பு வழங்குவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பகுதியைச் சேர்ந்த இருவரிடம் இவ்வாறு வேலை வாய்ப்பு வழங்குவதாக கூறி 31 இலட்சம் ரூபா பெற்றுக் கொண் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் வதிவிடமாக பெரதெனியா, ஜாஎல, நீர்கொழும்பு மற்றும் முருதலாவ போன்ற பல்வேறு பகுதிகளைக் கூறியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரி வித்துள்ளார்.

55 மற்றும் 26 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து அவர்களை 7 ஆம் திகதி வரையில் விளக்கமறி யலில் வைக்க உத்தரவிடப் பட்டுள்ளது. (நி-5)

# இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் களமிறங்கும் நாடுகள்?

## -தென்னிலங்கை ஊடகம் தகவல்-

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக தடை களை விதிக்க வேண்டு மெனக் கோரி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற திட்ட மிடப்பட்டுள்ளதாக தென்னி லங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 48 ஆம் அமர்வின் போது இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பிரித்தானியா உள்ளிட்ட ஐந்து நாடுகள் இந்த திட்டத்தை தீட்டியுள்ளதாக குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

பிரித்தானியா மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக குறிப்பிட்டு சீனா முன்வைத்த தீர்மானத்திற்கு இலங்கை ஆதரவளித்த கார ணத்தினால், பிரித்தானியா இலங்கைக்கு எதிராக தீர் மானம் நிறைவேற்ற முயற் சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

பிரித்தானியா, மெசிடோ னியா, கனடா, ஜேர்மனி மற் றும் மொன்டினீக்ரோ ஆகிய நாடுகள் இவ்வாறு இலங் கைக்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டுமென ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரி மைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற உத்தேசித்துள் ளதாக அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (நி-5)


## நல்லூர் பிரதேச சபை
## பகிரங்க ஏலவிற்பனை
## அறிவித்தல்

இடம் : தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை


காலம்: 2021.08.12 வியாழக்கிழமை மு.ப. 10.30

ஏலப்பொருட்கள் : பாவித்த அலுவக பாவனைப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், இரும்புப் பொருட்கள், மேசை பகுதிகள், வட்டக்கல், சீமெந்துக்கல், விளம்பரப் பலகைகள், முகட்டு ஓடு, பாவித்த ரயர், தீராந்தி, விறகு பாவனைக்கான வேப்பமரம்

ஆர்வமுள்ளோர் ஏலப்பொருட்களை அலுவலக நாட்களில் 2021.08.11 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் பார்வையிடலாம் என்பதுடன் 2021.08.12 வியாழக் கிழமை மு.ப. 8.30 தொடக்கம் கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்து, சுகாதார விதிமுறைகளுக்கமைவாக ஏலத்தில் கலந்து கொள்ளலாம். சித்தி பெறும் ஏலதாரர் உரிய தொகையினை உடன் பணமாகச் செலுத்தி உடன் பொருட்களை எடுத்துச் செல்லல் வேண்டும்.

திரு.ப.மயூரன்
தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.
021 222 2700

(2440)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினரால் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு சர்வதேச நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றது. மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முன் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த ஒரு வாரத்தில்
# யாழ்.புங்குடுதீவு பகுதியில் 15 கர்ப்பிணிகளுக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த 15 கர்ப்பிணி தாய்மார்கள் கடந்த ஒரு வார கால பகுதிக்குள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக கொரோனா தொற்றுக்கு உள்ளாகி வருவோர் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில் கடந்த ஒரு வார காலப்பகுதியில் 15 கர்ப்பிணி தாய்மார்களும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தொற்றுக்கு உள்ளான கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளிட்டவர்கள் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. (4-6-8-33)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் யாழ்.அலுவலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.




காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை ஐ.நா. பெற்றுத்தர வேண்டும் எனவும் நீண்டகாலமாக தமது உறவுகளைத் தேடிய வண்ணம் வீதிகளிலும் மழை, வெயில்களிலும் போராடி வருவதாகவும் தமது பிள்ளைகள் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி பூங்கோதை தலைமையில் குறித்த போராட்டம் இடம்பெற்றது. (4-6-8-33)

# இன்று கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்படும் இடங்கள்

| MOH | கிராம உத்தியோகத்தர் பிரிவு (30 வயதுக்கு மேற்பட்டோர்) | தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| சங்கானை | ஜே/ 172, ஜே/ 174 | சுழிபுரம் விக்டோரியா கல்லூரி |
| | ஜே/ 159, ஜே/ 165, ஜே/ 166 | வட்டு மத்திய கல்லூரி |
| சாவகச்சேரி | ஜே/288, ஜே/299 | ஆரம்ப சுகாதார மருத்துவ மையம் - கைதடி |
| | ஜே/300, ஜே/319 | சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபம் |
| | ஜே/320, ஜே/321 - ஜே/337, ஜே/347 | வரணி பிரதேச வைத்தியசாலை |
| | ஜே/322, ஜே/336 | கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை |
| யாழ்ப்பாணம் | ஜே/66 | சென். ஜோன்ஸ் கல்லூரி |
| | ஜே/87 | வைத்தீஸ்வரா கல்லூரி |
| | ஜே/109 | நல்லூர் துர்க்கா மணி மண்டபம் |
| காரைநகர் | ஜே/40, ஜே/48 - மற்றும் வீதிப் பணியாளர்கள் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - காரைநகர் |
| கரவெட்டி | அனைத்து முன்களப் பணியாளர்கள் மற்றும் கர்ப்பவதி. தாய்மார் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை -கரவெட்டி |
| ஊர்காவற்றுறை | அனைத்து முன்களப் பணியாளர்கள் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - ஊர்காவற்றுறை |
| கோப்பாய் | ஜே/263, ஜே/264 | உரும்பிராய் இந்துக் கல்லூரி |
| | ஜே/ 267 | ஊரெழு கணேசா வித்தியாலயம் |
| | ஜே/271 ஜே/272 | புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி |
| | ஜே/279 | அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை |
| மருதங்கேணி | ஜே/426 | மாமுனை -ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை |
| | ஜே/427 | செம்பியன்பற்று பாடசாலை |
| நல்லூர் | ஜே/89 | மணியந்தோட்டம் தேவாலயம் |
| | ஜே/111, ஜே/122 | முத்துத்தம்பி மகா வித்தியாலயம் |
| | ஜே/119 முன்களப் பணியாளர்கள் | நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை |
| | ஜே/125, ஜே/127 | மஞ்சவனப்பதி கோவில் திருமண மண்டபம் |
| பருத்தித்துறை | ஜே/396, ஜே/397, ஜே/415, ஜே/417 மற்றும் முன்களப் பணியாளர்கள் | வட இந்து மகளிர் கல்லூரி |
| சண்டிலிப்பாய் | ஆனைக்கோட்டை பொது சுகாதார அதிகாரி பிரிவினர் | பிரதேச வைத்தியசாலை - மானிப்பாய் |
| | சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் | சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி |
| | மானிப்பாய் பொது சுகாதார அதிகாரி பிரிவினர் | மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலை |
| தெல்லிப்பழை | ஜே/230, ஜே/231 | யூனியன் கல்லூரி (காலை 8 மணி முதல்) |
| | ஜே/232, ஜே/233 | யூனியன் கல்லூரி (முற்பகல் 10 மணி முதல்) |
| | ஜே/234, ஜே/235 | யூனியன் கல்லூரி (மதியம் 12 மணி முதல்) |
| உடுவில் | ஜே/187, ஜே/200 | உடுவில் மகளிர் கல்லூரி |
| | ஜே/191 | இணுவில் இந்துக் கல்லூரி |
| | ஜே/192 | தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை |
| | ஜே/195 | உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை |
| | ஜே/203 | ஏழாலை முத்தமிழ் மன்றம் |
| | ஜே/208 | புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் பாடசாலை |
| வேலணை | ஜே/22, ஜே/26 | புங்குடுதீவு கணேச வித்தியாலயம் |

# பருத்தித்துறையில் வாள்வெட்டு குடும்பப்பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வாள் வெட்டுக்குழுவின் தாக்குதலுக்கு இலக்கான குடும்பப் பெண் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திக்கம் அல்வாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணே குறித்த தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த பெண்ணின் வீட்டினுள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை புகுந்த வன்முறை கும்பல் வீட்டில் இருந்த பொருட்களை அடித்து நொருக்கி பெண் மீதும் வாள் வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(4-6-8-33)

# கஞ்சாவுடன் பெண் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-உதயசூரியன் கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கஞ்சா போதைப்பொருளுடன் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் உதயசூரியன் பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளம் பெண் ஒருவரே இவ்வாறு 50 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார்.

கைதான பெண்ணை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(4-6-8-30)



யாழ்.கந்தர்மடம் பழம் வீதியை அண்மித்த பகுதியில் உள்ள சில பொருளாதார வலு குறைந்த 20 குடும்பங்களுக்கு திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியிலுள்ள தீபம் இன்ரியூட் நிறுவனத்தினால் பயணத்தடை காலப்பகுதியில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் தடுப்பூசியை கட்டாயமாக்கும் சட்டம்

## அரசாங்கம் தீர்மானம்



**(கொழும்பு)**

**இலங்கையில் கொவிட் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதை சட்டமாக அமுல்படுத்த அரசாங்கம் தீர் மானித்துள்ளது.**

கொவிட் தடுப்பு செயலணி யின் தலைவர் ஜனாதிபதி யின் சிரேஷ்ட ஆலோகர் லலித் வீரதுங்க நேற்று முன் தினம் இந்த விடயத்தை தெரி வித்தார்.

அனைத்து குடிமக்களுக்கும் தடுப்பூசி வழங்குவதனை கட்டாயமாக்கும் சட்ட கட்டமைப்பு இல்லை என்ற போதிலும் அது மிகவும் சிந்தித்து எடுக்க வேண் டிய தீர்மானம் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

சில நாடுகள் பல்வேறு சட்ட ங்கள் மற்றும் விதிமுறைகளால் தடுப்பூசியைக் கட்டாயமாக்கி யுள்ளன.

தடுப்பூசிகள் குறித்த பல் வேறு தவறான எண்ணங் கள் சமூக மயமாக்கப்பட்டுள் ளன.

எனினும், உலக சுகாதார நிறுவனம் தடுப்பூசி கொவிட் கட்டுப்பாட்டிற்கு சிறந்த தீர்வு என்று பரிந்துரைத்துள்ளது.

எவ்வாறாயினும், தடுப்பூசி போடப்பட்ட நபர்கள் பற்றிய தகவல்களை கிராம உத்தியோ கத்தர் மூலம் பெற ஜனாதிபதி யின் அறிவுறுத்தலின் பேரில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தகவலை பெற்ற பிறகு, தடுப்பூசி போடப்படாதவர்கள் பற்றிய உண்மைகள் வெளிப் படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் - சஜித்

(கொழும்பு)

இஷாலினி என்ற சிறுமியின் உயிரிழப்புச் சம்பவமானது நாடளாவிய ரீதியில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான ஆழமான கலந்து ரையாடல்களைத் தோற்றுவித் திருக்கின்றது.

எனவே இப்போதேனும் அவ ர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கான புதிய சட்டங் களை உருவாக்குவதற்கோ அல் லது சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள எதிர் க்கட்சித்தலைவர் சஜித் பிரே மதாஸ, அதற்கு எவ்வித நிப ந்தனைகளுமின்றி முழுமை யான ஆதரவை வழங்குவத ற்குத் தமது கட்சி தயாராக இருப் பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பின் தலைவர் தலதா அத்துகோரள தலைமை யிலான அதன் உறுப்பினர்களு டன் கொழும்பிலுள்ள எதிர்க்க ட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். (நி-5)

# கொத்தலாவல சட்டமூலத்தை திருத்தாது 2 ஆம் வாசிப்பிற்கு கொண்டுவர வேண்டாம்

## ஐ.தே.க.

(கொழும்பு)

பாராளுமன்றில் சமர்ப்பிக்க ப்பட்டுள்ள ஜோன் கொத்தலா வல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை பாராளுமன்றின் இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளாமல் காணப்படும் குறைப்பாடுகளை திருத்திக் கொள்ள வேண்டும்.

பாதுகாப்பு மற்றும் கல்வி பாராளுமன்ற ஆலோசனை தெரிவுக்குழு கூட்டத்தை நட த்தி சட்டமூலத்தை திருத்தம் செய்வது குறித்து அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி அறிக்கை வெளியிட்டுள் ளது. (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 56 செவ் 1 சூரி 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Driver (தனியார்)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/2054 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 21 செவ் 10 சூரி 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:. அரச விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரியாக இருத்தல் நன்று<br>தொ.இ:G/6106 |
| பிறப்பு: 1985 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: காட்வெயார் கடையில் நிரந்தர தொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/2078 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 40 செவ் 11 சூரி 12 இல்<br>உயரம்: 40<br>தகைமை/ தொழில்: BA, மொழி பெயர்ப்பாளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த வேலை பார்க்கும் பெண்<br>தொ.இ:G/6121 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 62 செவ் 7 சூரி 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: அவுஸ்திரேலிய PR உண்டு<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/2067 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 52 செவ் 2 சூரி 1 இல்<br>உயரம்: 155 cm<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் பொறியியலாளர், கணக்காளர்<br>தொ.இ:G/6135 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 23 செவ் 7 சூரி 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: சிரேஷ்ட ஆலோசனை உத்தியோகத்தர் (7வருடம்)<br>எதிர்பார்ப்பு: அரச வேலை<br>தொ.இ: B/2091 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: செவ் 10 சூரி 5 இல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு. உள்நாடு ஆயின் அரச தொழில்<br>தொ.இ:G/6110 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# மாணவர்களின் நிலையினை கருத்தில் கொண்டு வேலை நிறுத்த போராட்டத்தை நிறுத்துங்கள்

## கத்தோலிக்க ஆயர்கள் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

கொவிட்-19 பெருந்தொற்று நாடு முழுவதும் பரவிபல ஆயிரக்கணக்கான உயிர்களை காவு கொண்டும், மனித வாழ்வில் பல நிலைகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தி நாட்டையே வெகுவாகப் பாதித் துள்ளது.

சமூக, அரசியல், மத மற்றும் இன வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அரசாங்கமும் பொதுமக்களும் புத்தி சாலித்தனமான முடிவுகளை எடுத்து மக்களின் நலனுக்காக ஒத்துழைப்பு டன் செயற்படாவிட்டால் சில நீடித்த தீங்கு விளைவிக்கும் விளைவுகள் ஏற்படலாம்.

அரசாங்கம் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளும் தடுப்பூசித் திட்டத்திற்காக பாராட்டும் வேளையில் சமூகத்தின் ஏழ்மைச் சூழலில் தொற்று நோயால் ஏற்படும் மோசமான விளைவுகளைத் தடுக்க இன்னும் தீவிரமான நட வடிக்கைகளை எடுப்பதை உறுதி செய்ய வேண்டும் என இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வேண்டுகோள் விடுத் துள்ளது.

அத்துடன் பிள்ளைகள் மற்றும் இளையவர்களைப் பெருந்தொற்றில் இருந்து பாதுகாக்கும் நோக்குடனேயே பாடசாலைகளும் பிற கற்றல் நிறுவனங் களும் மூடப்பட்டன.

இந்நேரத்தில் கல்வி கற்கும் மாண வர்களின் நிலைமை மிகுந்த கவ லையை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்கால குடிமக்களை உருவாக்கு வதும் வடிவமைப்பதும் ஆசிரியர்களின் புனித பணியாகும். ஆசிரியர்கள் தம் பொறுப்பிலுள்ள மாணவர்களைக் கருத்தில் கொண்டு தற்போது அனுஷ் டிக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நிறுத்துமாறு அழைப்பு விடுக்கின் றோம்.

அதேவேளை எமது எதிர்கால குடிமக்களையும் தலைவர்களையும் உருவாக்கும் ஆசிரியர்கள் மிகவும் முக் கியத்துவம் வாய்ந்தவர்களாக இருப்பதால் அவர்களின் நீண்டகால சம்பள முர ண்பாடுகளை சீர்செய்யுமாறு மாணவர் களின் நலனுக்காக அரசாங்கத்திடம் ஒரு வேண்டுகோளையும் விடுக்கின் றோம்.

கொவிட் -19 பெரும் தொற்று ஏற் படுத்திய பொருளாதார பின்னடைவால் முழு நாடும் உதவியற்ற நிலையில் உள்ளது.

அதிக விகிதமான வேலையின்மை தவிர்க்க முடியாத வறுமையை ஏற்படுத்தி நிற்கின்றது.

எனவே சுயநலத் திட்டங்கள் தவிர் க்கப்பட்டு, முன்னுரிமைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் முன்மொழியப்பட்டு அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டும்.

ஏனைய நாடுகளில் காணப்படும் சிறந்த நடைமுறைகளை நாம் கடைப் பிடிக்கும் அதேவேளையில் தலைமைத் துவமானது அரசியல் கருத்துக்களையோ, சுய நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவோ அல்லாது நிபுணர்களின் ஆலோச னைகளைப் பெற்று செயற்பட வேண் டும்.

இறைவன் நம் நேசத்துக்குரிய தாய் நாட்டையும் அதன் அனைத்துக் குடிமக்களையும் ஆசீர்வதிப்பாராக என பேரவை மேலும் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வன்முறைகள் கிளிநொச்சியில் அதிகரிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாட்களாக குடும்ப வன்முறைகள் மற்றும் பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறை சம்பவங்கள் அதிகளவில் கிடைக்கப்பெற்றுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாட்களாக குடும்ப வன்முறைச் சம்பவங்கள் மற்றும் சிறுவர், பெண்கள் மீதான வன்முறை சம்பவங்கள் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன.

அதாவது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தொழில் வாய்ப்பின்மையால் பெரும்பாலானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது போதைப் பொருள் பாவனை, சட்டவிரோத கசிப்பு உற்பத்தி என்பவற்றால் கிராமப்புறங்களில் குடும்ப வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக குடும்பப் பெண்கள் தாக்கப்படுதல், சிறுவர்கள் குடும்ப உறுப்பினர்களால் தாக்கப்படுதல் போன்ற சம்பவங்கள் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் நிலையத் தகவல் மூலம் அறிய முடிகின்றது.

தற்போது பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் சட்டவிரோத சட்ட ரீதியற்ற தொழிலுக்கு குறைந்த வேதங்களுடன் சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-6-8-315)

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் முல்லைத்தீவில் கவனயீர்ப்பு



(பனிக்கன் குளம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1604 ஆவது நாளாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்றைய தினம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அவர்களுடைய போராட்ட கொட்டகைக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுவரை காலமும் தமக்கு எந்தவித நீதியும் கிடைக்கவில்லை என்றும் உடனடியாக தமக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் உறவினர்கள் வலியுறுத்தினர். (4-6-8-281)

# வெள்ளை வானில் பெண்ணை கடத்தி தங்க நகை திருடியவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் ஆலயத்திற்கு சென்றுவிட்டு வீடு நோக்கி நடந்து சென்ற பெண் ஒருவரை வெள்ளை வானில் கடத்திச் சென்று அவர் அணிந்திருந்த தங்க நகையைத் திருடி விட்டு குறித்த பெண்ணை இறக்கி விட்டு தப்பிச் சென்றமை குறித்து அண்மையில் பொலிஸ் நிலைத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞன் ஒருவரையே பழைய பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து திருட்டுச்சம்பவத்திற்குப் பயன்படுத்திய வெள்ளை நிற டொல்பின் ரக வான் மற்றும் தங்க நகை உருக்கிய கட்டியாக மீட்கப்பட்டது.

குறித்த சந்தேக நபரை வவுனியா பொலிஸ் நிலையத்தில் குற்றத்தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெவித்தனர். (4-6-8-299)

# குடிநீர் திட்டத்தை விரைவுபடுத்துங்கள் இல்லையெனில் குழிகளை மூடுங்கள்

## முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரிற்கான குடிநீர்த் திட்டம் கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக இழுபறி நிலையிலேயே காணப்படுகின்றது.

வற்றாப்பளை கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள பெரும்பீலிப் பகுதியில் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் வழங்கலை மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் வேலைத் திட்டங்கள் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்டன.

இருந்தபோதிலும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் வழங்கலை மேற்கொள்கின்ற போது திறந்த கிணறுகளின் நீர் மட்டம் அடிநிலையினைச் சென்றடையும் காரணமாக இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மாற்று வழியாக கரைதுறைப்பற்றின் மணவாளன் பட்ட முறிப்புக் குளத்தில் இருந்தோ அல்லது வற்றாப்பளை ஊடாக நந்திக் கடல் வழியாக கடலினைச் சென்றடையும் நீரினை சேமித்து குடிநீராக வழங்குவதற்கான திட்டங்கள் பற்றி கூட்டங்களில் ஆராயப்பட்டன.

ஆனால் தற்போதும் முல்லைத்தீவு நகரத்தின் பல வீதிகளில் குழாய்கள் பொருத்துவதற்கு வெட்டப்பட்ட குழிகள் காரணமாகவே விபத்துகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படும் நிலையில் இறுதியாக நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச சபை அமர்விலும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு கடிதங்கள் அனுப்புவது என்றும் குடிநீர்த் திட்டத்தினை விரைவாக நடைமுறைப்படுத்தாவிட்டால் குழாய்கள் பொருத்துவதற்கு வெட்டப்பட்ட குழிகளை மூடுங்கள் என்றும் முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை விடுத்தனர். (4-6-8-350)

# சிறுமி இஷாலினியின் மரணம் வறுமையின் அடையாளம்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களை கண்டித்து மொத்தச் சமூகமும் குரலுயர்த்துவது வரவேற்கத்தக்கதே. எனினும், கரிசனைகள் வெறுமனே களச் சூழலோடு மட்டும் காணாமல் போகும் விடயமாக அன்றி இவ்வாறான சம்பவங்கள் மீள் நிகழாதவாறு 'ஏன்? எதனால்? எப்படி?' என ஆராய்ந்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

சிறுமி இஷாலினியாவின் மரணம் தொடர்பில் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டினுடைய பொருளாதாரத்தின் முக்கிய முதுகெலும்பாக விளங்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் நூற்றாண்டு காலத் துயரமாகத் தொடர்கின்றது.

இந்த மக்களின் தொழில் கௌரவம், பாதுகாப்பான வாழிடம், கல்வி, சுகாதாரம், நிரந்தர வருமானம், சுயதொழில் வாழ்வாதாரத்துக்கான வாய்ப்பு போன்ற அடிப்படைக் காரணிகள் தொடர்பில் அரசு முதலில் கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையேல், செல்வந்தர்களின் பங்களாக்களை நாடிச் செல்லும் சிறுவர் கூலிகளையும் மலையக மண்ணிலிருந்து இல்லாதொழித்திட முடியாது.

சிறுவர்கள் தொழிலாளர்களாவதில் குடும்பங்களின் பொருளாதாரச் சமூகப் பண்புகள் குறித்து பெற்றோர்களின் தீர்மான மனப்பாங்கும் ஒரு காரணமாகின்றது.

பிள்ளைகளைத் தொழிலில் ஈடுபடுத்தி அவர்களது பொருளாதார உதவிகளைப் பெறுவதற்கு இந்தக் குடும்பங்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

மலையக சமூகத்தின் முக்கிய குறைபாடான வறுமையை ஒழித்து அவர்களது நிரந்தர வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மலையக தொழிற்சங்களும், அரசியல் தலைமைகளும், சமூக ஆர்வலர்களும் இணைந்து விரைந்து முன்னெடுக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

31.07.2021
ஆடி 15, சனிக்கிழமை
சப்தமி முற்பகல் 8.24 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 7.38 மணிவரை
சுபநேரம் 3.03 - 4.33 மணிவரை
இராகுகாலம் 9.03 - 10.33 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தரம், அத்தம்

வளவன்


மேஷம்

வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், நீங்கள் நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.


ரிஷபம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரிய செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


மிதுனம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.


கடகம்

செய் தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும், போசன நன்மையுண்டு, கௌரவமான நாள்.


சிம்மம்

மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளித்து வருவீர்கள், தொழில் ரிதியாக புதிய திட்டங்கள் திட்டுவீர்கள், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.


கன்னி

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்பது நல்லது, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.


துலாம்

வியக்கும் வாழ்வமைய விட்டுக் கொடுத்து செல்ல வேண்டிய நாள், சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


விருச்சிகம்

செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், கௌரமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள புதிய வழி பிறக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.


மகரம்

நல்லவர்களின் தொடர்புகள் கிடைத்து மகிழ்வீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கும்பம்

சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்

மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

ஆன்மிக மகிழ்ச்சி வானவில்லைப் போன்று அழகானது.

# நெல்லினை கொள்வனவு செய்ய நெல் சந்தைப்படுத்தல் சபை முடிவு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்படுகின்ற சிறுபோக நெல்லினை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது**

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெல்லறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகளிடம் இருந்து இதுவரை பல கூட்டுறவு சங்கங்களும் நெல் சந்தைப்படுத்தல் சபை என்பன இதுவரை நெல்லைக் கொள்வனவு செய்யவில்லை. இதனால் தனியார் வர்த்தகர்களுக்கு விவசாயிகள் குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்ய வேண்டிய தேவை காணப்படுவதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களிலே விவசாயிகளுக்கு தேவையான உர மானியம் வழங்கப்பட்டதுடன் அதைவிட தனியார் வர்த்தக நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைகளில் உரம் மற்றும் மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்துள்ளது.

இம்முறை அவ்வாறல்லாமல் விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரம் மற்றும் கிருமிநாசினிகளை பன்மடங்கு அதிக விலையில் பெற்றுக் கொண்டு தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் முதற்கட்டமாக நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பதப்படுத்தி சரியான ஈரப்பதன் பேணப்படும் நெல் கொள்வனவு செய்யப்படும் எனவும் நெல் சந்தைப்படுத்தும் சபை தெரிவித்துள்ளது. (4-6-8-315)

# காணிகளை வழங்கிய மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-தபாற்கந்தோர் வீதி அகலிப்பு மற்றும் கழிவு வாய்க்கால் அமைப்புப் பணிகளுக்காக தமது காணிகளை விட்டுக்கொடுத்த பொதுமக்களுக்கு சாவகச்சேரி நகரசபை சிறப்பான சேவையை வழங்க வேண்டும் என நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் கோரிக்கை விடுத்துள்ளார். அண்மையில் நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான தபாற்கந்தோர் வீதி புனரமைப்பு மற்றும் வடிகாலமைப்பு பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. இதன்போது வீதி அகலிப்பின் நிமித்தம் வீதியின் இருமருங்கிலும் உள்ள பல குடியிருப்பாளர்கள் தமது பெறுமதியான காணிகளை விட்டுக் கொடுத்துள்ளனர்.

எனவே எதிர்காலத்தில் அந்த மக்கள் ஏதேனும் அனுமதி மற்றும் உதவிகளைப் பெறும் நிமித்தம் நகர சபையை நாடும் போது அவர்களுக்கு தரமான சேவையை வழங்க நகர சபை முன்வர வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (4-6-8-30)

# ஹெரோயினுடன் இருவர் கைது

(கரணவாய்)

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில்வைத்திருந்த இருவர் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு பருத்தித்துறை பொலிஸார் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது அல்வாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உடைமையில் 60 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த நிலையிலும், புலோலி கூவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 160 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த நிலையிலும் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (4-6-8-60)

# அகற்றப்பட்டது மரக்கறிக் கடை

(குப்பிழான்)

யாழ்.ஆரியகுளம் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரினால் யாழ்.மாநகர சபையின் அனுமதி இன்றியும் சட்டவிரோதமாகவும் போக்குவரத்திற்கு இடையூறாக அமைக்கப்பட்ட மரக்கறிக் கடை நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாநகரசபை ஊழியர்களினால் அகற்றப்பட்டது. (4-6-8-18)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கை அரசை நிறுத்து

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(நெளுக்குளம்)

இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்துவதனூடாகவே எமக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் நடைபெற்றுவரும் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.


தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்கள், எமக்கு சர்வதேச நீதி கிடைப்பதற்காக நாம் போராடி வருகின்றோம். இன்று பல்வேறு அமைப்புகளையும் கட்சிகளையும் சார்ந்தவர்கள் சர்வதேச நீதி கிடைப்பதற்கு தடையாக இருந்து அரசை பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

எமது போராட்டம் வியாபார நோக்கத்திற்கானதல்ல, சுய நலத்திற்கானதல்ல உறவுகளின் உயிருடன் தொடர்புபட்டது. எமக்கான நீதி விரைவில் கிடைக்கும் என்பதற்காகவே தொடர்ச்சியாக போராடுகிறோம் என தெரிவித்தனர். (4-6-8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஸ்டெர்லைட்டில் ஒட்சிசன் உற்பத்தியை நீடிக்க தேவையில்லை- தமிழக அரசு




(சென்னை)

ஸ்டெர்லைட் ஆலையில் ஒட்சிசன் உற்பத்தியை நீடிக்கத் தேவையில்லை என தமிழக அரசு நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றின் இரண்டாவது அலையில் ஒட்சிசன் தேவை அதிகரித்ததை தொடர்ந்து ஸ்டெர்லைட் ஆலையில் ஒட்சிசன் உற்பத்தியை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

தற்போது ஒட்சிசன் தேவை குறைவடைந்துள்ள நிலையில், ஸ்டெர்லைட் ஆலையில் மேற்படி ஒட்சிசன் உற்பத்தியை நீடிக்க தேவையில்லை என தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த வழக்கு விசாரணையை அடுத்த வெள்ளிக் கிழமைக்கு ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதுடன், அதுவரை ஒட்சிசன் உற்பத்தி தொடரும் எனத் தெரிவித்துள்ளது.(8-5)

## தென் சீனக் கடலில் நுழைந்த பிரிட்டன் போர் கப்பல்



(பீஜிங்)

பிரிட்டனின் ஹெச்.எம்.எஸ் குயின் எலிசபெத் போர் கப்பல் தலைமையிலான "கேரியர் ஸ்ட்ரைக் க்ரூப்" படைகள் தென் சீனக் கடலில் நுழைந்துள்ள நிலையில் "முறையற்ற செயல்களில்" ஈடுபட வேண்டாம் என்று சீனா எச்சரித்துள்ளது.

இக்கடல் பகுதியில் பிரிட்டன் கடற்படை சிங்கப்பூர் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

சீன கப்பற்படை எதையு எதிர்கொள்ள தயார் நிலையி இருப்பதாக சீன அரசுக்கு சார் டைய ஊடகம் ஒன்று செய் வெளியிட்டுள்ளது.

2016 இல் வழங்கப்பட் சர்வதேச நீதிமன்ற தீர்ப்புக் முரணாக தென் சீனக் கடலி பெரும்பகுதி தனக்கு சொந்த என்கிறது சீனா. இதை மீறு வகையில் அமெரிக்கா, பிரிட்ட உள்ளிட்ட நாடுகள் இந்தக் கட பரப்பை பயன்டுத்திவருகின்றன.(8-

## விசம் வைத்து கொல்லப்பட்ட 46 குரங்குகள்



(டில்லி)

இந்தியா - கர்நாடகாவில் 40க்கும் மேற்பட்ட குரங்குகள் விஷம் வைத்து கொல்லப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

60 குரங்குகளை கொலை செய்து கோணிப்பைகளில் கட்டி சாலை ஓரத்தில் வீசியுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றனர்.

இதன்போது 14 குரங்குகள் மயக்க நிலையில் இருந்தது தெரியவந்துள்ளதுடன், அவை மீட்கப்பட்டு கால்நடை மருத்துவமனைக்கு சிகிச்சைகளுக்காக கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எஞ்சிய 46 குரங்குகளும் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பில் கர்நாடக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-5)

## இஸ்ரேலில் 60 வயதுக் மூன்றாவது டோஸ்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது டோஸ் கொவிட் தடுப்பூசி செலுத்தப்படும் என பிரதமர் நாஃப்டாலி பென்னட் தெரிவித்தார்.


இதன்மூலம் உலக நாடுகளில் பொதுமக்களுக்கு மூன்றாவது டோஸ் கொவிட் தடுப்பூசி செலுத்தப்படும் என முதல் நாடாக இஸ்ரேல் மாறியுள்ளது.

இது குறித்து பிரதமர் நாஃப்டாலி பென்னட் தெரிவிக்கையில், 'தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என நிரூபிக்கப்பட்டுள்ளன. தீவிர



பாதிப்பு மற்றும் உயிரிழப்பிலிருந்து தடுப்பூசிகள் பாதுகாக்கின்றன என்பதும் நிரூபணமாகி

## கேரளாவில் கொரோனா தொற்றின் தாக்கம் அதிகரிக்கும்



(டில்லி)

கேரளாவில் அடுத்த மூன்று வார காலத்தில் கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகரிக்கக் கூடும் என தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து தேசிய கட்டுப்பாட்டு மையத்தின் இயக்குநர் எஸ்.கே.சிங் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

'கேரளாவில் கொரோனா பரிசோதனை அதிகரித்துள்ளது.

கூடுதல் பரிசோதனைகள் நடத்தப்படுவதன் மூலம் நோயாளிகளைக் கண்டறிந்து அவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்காகவே கடந்த சனி மற்றும் ஞாயிறு நாட்களில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. பொது இடங்களில் கூட்டம் கூடுவதை தவிர்க்க வேண்டும்.

திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளை குறைந்த நபர் களுடன் நடத்த வேண்டும்' என அவர் தெரிவித்தார். (8-5)

## சொந்த நாட்டை விட்டு வெ நாட்டவர்களுக்கு புகலிட



(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்த அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட ஆப்கானிஸ்தான் நாட்டவர்களில் முதலாவது குழு அங்கிருந்து வெளியேறியுள்ளது.

சுமார் 2500 பேரும் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

த
ல்

யும்
யில்
ார்பு
ய் தி
ட்ட
க்கு
பின்
தம்
றும்
டன்
டல்
(8-5)

# மத்திய கிழக்கு நாடுகளில் டெல்டாவினால் நான்காவது அலை

## எச்சரிக்கை விடுக்கும் உலக சுகாதார அமைப்பு

(ஜெனீவா)

**மத்திய கிழக்கு நாடுகளில் டெல்டா வகைகொரோனாவால் நான்காம் அலை உருவாகியுள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

உலகின் பல்வேறு பகுதிகளில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்துவருகிறது. முகக்கவசம் அணிவது, தனிமனித இடைவேளை உள்ளிட்ட பாதுகாப்பு வழிமுறைகளை பின் பற்றவில்லை என அடுத்தடுத்த அலை உருவாகும் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்திருந்தது.

இந் நிலையில் , டெல்டா வகை கொரோனாவால் மத்திய கிழக்கு நாடுகளில் நான்காம் அலை உருவாகியுள்ளது என உலக சுகாதார அமைப்பு நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட தீவிரமாக பரவக்கூடிய கொரோனா வகை 22 மத்திய கிழக்கு நாடுகளில் 15 க்கு பரவியுள்ளது. மொரோக்கோ தொடங்கி பாகிஸ்தான் வரை பரவியுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் டெல்டா வகை கொரோனாவால் பரவல் அதிகரித்துள்ளது. பாதிக்கப்படுவோரில் பெரும்பாலானோர் தடுப்பூசி செலுத்தி கொள்ளவில்லை. இப் பகுதிகளில் நான்காம் கொரோனா அலை பரவி வருகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (8-5)

**உலகளவில் கொரோனா**
**உயிரிழப்பு :- 4 222 502**
**தொற்று :- 197 732 558**
**(நேற்றைய மாலை நிலைவரம்)**

# க்கு மேற்பட்டோருக்கு ) கொவிட் தடுப்பூசி



யுள்ளது.

அவ்வப்போது புதுப்பிக்க வேண்டிய காய்ச்சல் தடுப்பூசிகளைப் போல, கொரோனா தடுப்பூசிகளும் புதுப்பிக்கப்பட வேண்டும். அதன்படி, நாட்டில் ஏற்கெனவே இரு டோஸ் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்படும்.

நாட்டின் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் முதல் நபராக நேற்றைய தினம் மூன்றாவது டோஸ் தடுப்பூசியை செலுத்திக் கொண்டார். பொதுமக்களுக்கு நாளை முதல் மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்படும்' என கூறினார். (8-5)


# சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்ட ரஷ்ய கலத்தில் தீ விபத்து

(வோஷிங்டன்)


சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு நேற்று முன்தினம் புதிதாக அனுப்பப்பட்ட ரஷ்யாவின் நௌகா கலத்தில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டது. இதனால் கலத்தில் சில கோளாறுகள் ஏற்பட்டது.

எனினும் தற்போது கலத்தில் ஏற்பட்ட கோளாறு சீரமைக்கப்பட்டு, சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள அனைத்து அமைப்புகளும் நன்றாக இயங்குவதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா தெரிவித்துள்ளது.

இந்த திடீர் விபத்து நிகழ்ந்தபோது சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்த ஏழு விண்வெளி வீரர்களுக்கும் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை என்று



அமெரிக்க மற்றும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (8-5)



**பல்வேறு வகைகளில் பலர் கின்னஸ் சாதனை படைத்து வரும் நிலையில் அமெரிக்க பெண் ஒருவர் அதிக நீளத்திற்கு வாயை திறந்தே கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.**

# ளியேறிய ஆப்கானிஸ்தான் டம் வழங்கிய அமெரிக்கா

களது குடும்பத்தினரும் இவ் வாறு வெளியேறி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அனைவரும் அமெரிக்காவின் வோஷிங்டன் டிசியில் உள்ள ஃபோர்ட் லீ இராணுவ முகாமில் விசேட விசா செயன்முறைகளுக்காக தங்க வைக்கப்படவுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் யுத்தம் ஆரம்பமான போது அமெரிக்காவினால் ஈடுபடுத்தப்பட்ட இராணுவத் துக்கு உதவியளித்தவர்களில் ஒரு பகுதியினரே இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தற்போது ஆப்கானிஸ்தா னில் தாலிபான் பயங்கரவாதி களின் ஆதிக்கம் மேலோங்கி யுள்ளது.

இதனால் அமெரிக்கப்படையினருக்கு உதவியளித்தவர்களுக்கான அச்சுறுத்தலும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையிலேயே அவர்களுக்கு அமெரிக்கா புகலிடம் வழங்குகிறது.

2009 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் சுமார் 70 ஆயிரம் ஆப்கானிஸ் தானியர்கள் அமெரிக்காவில் குடியேறி இருப்பது குறிப்பிடத் தக்கது. (8-5)



இந்தியாவில் உள்ள ஒடிசா மாநிலத்தின் பத்ரக் மாவட்டத்தில் பக்மாரா என்ற கிராமம் உள்ளது. நீண்ட நாட்களாக அங்குள்ள சாலை சீரமைக்கப்படாமல் இருந்தது. இதனால் அப்பகுதியில் உள்ள சிறுவர்- சிறுமியர்களே ஒன்றிணைந்து சாலையை சீரமைக்கும் பணியை தொடங்கி உள்ளனர். இந்த சிறுவர்களின் பொறுப்புள்ள செயல் சமூகத்தின் மீது ஒவ்வொருவரும் அக்கறையுடன் இருக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளராக அஜித் ரோஹண



(கொழும்பு)

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவர் வகிக்கும் பதவிகளுக்கு மேலதிகமாக இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, ஜூலை மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் மூன்று வருடங்களுக்கு குறித்த பதவிக்காக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தற்போது பொலிஸ் ஊடக பேச்சாளராகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

## தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுகையில் இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.**

அதற்கமைய இவ் வருடத்தின் ஆரம்பத்திலிருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை வரை 16,497 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகலை, கண்டி, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய கால நிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது என தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

# பங்காளிக் கட்சிகள் வெளியேறுவதால் எவ்வித பாதிப்பும் அரசிற்கு இல்லை

## இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த

(கொழும்பு)

ராஜபக்ஷ அரசாங்கத்தில் எவரும் இணைந்து கொள்ளலாம், விருப்பமில்லாவிடின் தாராளமாக வெளியேறலாம் எனவும் பங்காளிக் கட்சிகள் வெளியேறுவதால் எவ்வித பாதிப்பும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்திற்கு ஏற்படாது என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

பல்வேறு கொள்கையையுடைய அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியை அமைத்துள்ளோம்.



இக்கூட்டணியில் பொதுஜன பெரமுன பிரதான கட்சியாக உள்ளது.

கூட்டணிக்குள் கருத்து வேறுப்பாடுகள் பல காணப்படுகின்றன. அரசாங்கத்தில் இருந்து வெளியேறவுள்ளதாக சுதந்திரக் கட்சியின் ஒரு சில உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

அமைச்சு பதவிகளையும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளையும் அரச வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டுள்ளவர்கள் அரசாங்கத்தில் இருக்க விருப்பமில்லையென்றால் வெளியேறுவோம் என்று கூறிக் கொண்டிருக்காமல் அரசாங்கத்தில் இருந்து தாராளமாக வெளியேறலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2367

### கஜிந்தா




### தக்ஷா




### மாளவி




### லதுஷன்




### தாருசன்




### கணேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 லட்சத்திற்கு மேற்பட்டோருக்கு ஒரே நாளில் தடுப்பூசி

## உலக சுகாதார அமைப்பு பாராட்டு

**(கொழும்பு)**

**ஒரேநாளில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்திய இலங்கையின் சாதனையை உலக சுகாதார அமைப்பு பாராட்டியுள்ளது.**

World Health Organization

இலங்கையில் கொரோனா வைரஸ்க்கு எதிராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை 5 இலட்சத்து 15 ஆயிரத்து 830 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த மைல்கல்லை எட்டிய சுகாதார அமைச்சகம் மற்றும் அரசாங்கத்திற்கு உலக சுகாதார அமைப்பு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது. (நி-5)

# நீரில் மூழ்கி இறப்பவர்கள் பட்டியலில் 23 ஆவது இடத்தில் இலங்கை



(கொழும்பு)

உலகில், நீரில் மூழ்கி இறப்பவர்களின் பட்டியலில் இலங்கை 23 ஆவது இடத்தில் இடம்பெற்றிருப்பதாக இலங்கை உயிர் காக்கும் சங்கத்தின் பிரதித் தலைவர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எச்.சூலசூரிய தெரிவித்தார்.

உலக நீரில் மூழ்கும் தடுப்பு தினத்தை முன்னிட்டு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் நாள் ஒன்றிற்கு குறைந்தபட்சம் இருவராவது நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர். அவர்களில் 98 வீதமானோர் அலட்சியமாக நீரில் மூழ்கி இறக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழப்பவர்களில் அதிகமானோர் 20 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். நாட்டில் இவ்வாறான விலைமதிப்பற்ற மனித உயிர்களின் அகால மரணத்தினால், அவர்களின் விலைமதிப்பற்ற உயிர்கள் இழக்கப்படுவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முக்கிய விடயங்களையும் கொண்டுள்ளவர்களையும் நாடு இழக்க நேரிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# சினோவக் தடுப்பூசியைப் பெறுவது குறித்து தீர்மானிக்கவில்லை-அரசாங்கம்



(கொழும்பு)

சீனாவிடம் இருந்து சினோவக் தடுப்பூசியைப் பெறுவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை சினோவக் தடுப்பூசிகளை கொள்வனவு செய்யவுள்ளதாக வெளியான செய்திகள் பொய்யானவை என்று மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதுபோன்ற எந்த முடிவும் அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சினோவக் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதா, எந்த விலையில் அல்லது எத்தனை டோஸ்களில் கொள்வனவு செய்வது என்பது குறித்து இலங்கை இதுவரை முடிவு செய்யவில்லை. அவசர தேவைக்கான தடுப்பூசியை இலங்கை அங்கீகரித்திருந்தாலும் அது கொள்வனவு செய்யப்படும் என்று அர்த்தமல்ல என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அடம் பிடிக்கும் குழந்தைகள்

"என் குழந்தை அடம்பிடிக்கின்றான் சேர் என்ன செய்வது என்றே எனக்குப் புரியவில்லை!" அப்படி என்று கவலைப்பட்டார் ஒரு அப்பா.

"என்ன செய்வது அப்பாவோட குணம் கொஞ்சமாவது பிள்ளைக்கு இருக்கத்தானே செய்யும்!" அப்படி என்றேன் நான்.

"அட போங்க சேர்... அவனை அடக்கிறதிற்கு ஏதாவது வழி சொல்வீர்கள் என்று பார்த்தால் நீங்கள் என்னுடைய சரித்திரத்தை புரட்ட ஆரம்பிக்கிறீர்கள்!" என்றார் அவர்.

"சரி... பையன் அடம் பிடித்தால் அவனை நீங்கள் எப்படி அடக்குவீர்கள்... அதை சொல்லுங்கள் முதலில்!" என்றேன்.

"வேறு என்ன செய்வேன்... மிரட்டுவேன், அடிப்பேன் அவ்வளவுதான்!" என்றார்.

"அடித்தால் அடங்கிடுவானா?" என்று கேட்டேன்?

"அது எப்படி அடங்குவான்... இன்னமும் தீவிரமாக அடம் பிடிக்க ஆரம்பித்து விடுவான். கத்தி ரகளை பண்ணிடுவான்" என்றார்.

குழந்தை அடம் பிடிக்கிறான் என்கின்ற கவலை பல குடும்பங்களிலே உள்ள ஒரு பிரச்சினை தான்! இதற்கு இப்போது மருத்துவர்கள் ஒரு சுலபமான வழியைச் சொல்லுகிறார்கள். அது என்னவென்றால்... ஒரு குழந்தை அடம் பிடித்தால் அதை அடிக்கக் கூடாதாம்! அதற்குப் பதிலாக வேறு ஒரு காரியம் செய்யலாமாம். அது என்னவென்றால்.

குடும்பத்திலே உள்ள எல்லோரும் ஒன்றுசேர்ந்து அந்தக் குழந்தையிடம் கொஞ்சநேரம் பேசாமல் இருந்திடனுமாம். குழந்தையாலே பேசாமல் இருக்க முடியாது. தன்னுடைய தவறை உணர்ந்து அது வருந்த ஆரம்பிக்கும். இப்படி தொடர்ந்து செய்து கொண்டு வந்தால் குழந்தை கொஞ்ச நாளிலே அடம் பிடிப்பதை நிறுத்தி விடும்.

அதேமாதிரி சில குழந்தைகள் சரியான காரணம் இல்லாமல் அடம் பிடிப்பதற்காகவே கத்துகிறது பாருங்க. அதை நிறுத்துவதற்குக் கூட வழி இருக்கின்றது.

அது எப்படி என்றால்... அது அழுகின்ற சமயத்திலே அந்த சத்தத்தை ஒரு "ரெக்கோட்டர்" மூலமா பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள். குழந்தை கத்த ஆரம்பித்தால் உடனே ஏற்கனவே பதிவு செய்து வைத்திருக்கிற அழுகை சத்தத்தை போட்டு அந்தக் குழந்தை காதிலே விழுகிற மாதிரிச் செய்யுங்கள்.

தன்னுடைய அழுகை சத்தத்தைக் கேட்க ஆரம்பித்தவுடனே அந்தக் குழந்தை தான் அழுகிறதை நிறுத்திக் கொள்ளும்.

சில குழந்தைகள் சாப்பிட மாட்டேன் என்று அடம் பிடிக்கும். வளர்ந்த குழந்தையை மேலும் வற்புறுத்திச் சாப்பிடச் சொல்லக்கூடாது. சிலபேர் கட்டாயப்படுத்தி சாப்பாட்டைத் திணிப்பார்கள். அது ரொம்பத் தப்பு.

குழந்தைக்கு விபரம் தெரிந்த பிறகு சாப்பாட்டு விடயத்திலே நீங்கள் தலையிட வேண்டிய அவசியமே இல்லை. பசித்தால் சாப்பிட வேண்டும் என்பது அதற்குப் புரியும்.

அதனாலே அது தானாகவே சுதந்திரமாக எடுத்துச் சாப்பிட அனுமதிக்க வேண்டும். சாப்பிடு சாப்பிடு என்று வற்புறுத்தக்கூடாது. நீங்கள் அதை வற்புறுத்தாமல் இருந்தால் அது உங்களை வித்தியாசமாகப் பார்க்க ஆரம்பிக்கும்.

உண்மையிலேயே பசி இருந்தால் தனக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவை எடுத்துப் போட்டு அந்தக் குழந்தை சாப்பிட்டு இருக்கும்.

எந்தப் பிரச்சினையும் இருக்காது. இது மாதிரி சில நுட்பங்களை மனதிலே வைத்துக்கொண்டால் வீட்டிலே குழந்தைகளாலே எந்தப் பிரச்சினையும் இருக்காது.

இந்தக் காலத்துப் பையன் ஒருத்தன் ரொம்பக் கவலையோடு வந்தான். என்ன விடயம்! என்று விசாரித்தேன் "எங்கப்பா என்னிடம் ஒரு மாதம் உன்கூட பேச மாட்டேன் போ! என்று சபதம் போட்டு விட்டார்" என்றான்.

"அதுக்காகவா கவலைப்படுகின்றாய்?" என்றேன். "இல்லை அந்த ஒரு மாதக்கெடு இன்றையுடன் முடிகின்றது. அதற்காக கவலைப்படுகின்றேன்!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

41

கலாநிதி க.தவலிங்கம்
ஒய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



என்பதுடன், அம்மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படாதொழிதலும் வேண்டும்.

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(10)-** இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு ஏதேனும் விடயம் தொடர்பில், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க சட்டங்களை ஆக்குவதற்கு அரசியலமைப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை, இந்த உறுப்புரையில் உள்ள எதுவும் மதிப்புக்குறைப்பதாக வாசிக்கப்படுதலோ பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(11)-** இந்த உறுப்புரையின் (3) ஆம் பந்தியில் எது எப்படியிருப்பினும் பாராளுமன்றமானது வேறு ஏதேனும் நாட்டுடனான உடன்படிக்கையை அல்லது நாடுகளுடனான ஏதேனும் ஒப்பந்தத்தை அல்லது சமவாயத்தை அல்லது சர்வதேச மாநாடு ஒன்றில், கழகத்தில் அல்லது வேறு குழுவில் எடுக்கப்பட்ட எவையேனும் முடிவுகளைச் செயற்படுத்துவதற்கென மாகாண சபைகள் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் அப்பந்தியில் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்கவல்லாது வேறு வகையில் சட்டங்களை ஆக்கலாம்.

**இயற்றப்படும் நியதிச்சட்டங்களுக்கு ஆளுநரின் சம்மதம் பெறல் (13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154H)**

மத்திய மட்டத்தில் (மத்திய அரசினால்) சட்டமாக்குவதைப் போலல்லாமல் (ஏனெனில் அங்கு ஜனாதிபதி பாராளுமன்றச் செயன்முறையில் எந்த வகிபங்கையும் ஆற்றுவதில்லை). மாகாண மட்டத்தில் மாகாண நியாயாதிக்க தேவைப்பாடுகளின் ஊடாக ஆளுநர் சட்டம் இயற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். அதாவது மாகாண சபையினாலே நியாயாதிக்கம் ஏற்றுக்கொள்ளப்படும் பொழுது அது உத்தியோகபூர்வ இணக்கத்திற்காக ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. அவர் அதற்கு சம்மதம் தெரிவிக்கலாம். அல்லது அதனை தடுத்து வைத்திருக்கலாம்.

அவர் சம்மதம் அளிக்கும் பொழுது நியாயாதிக்கம் அமுலுக்கு வருகிறது. சட்ட வாக்கத்திற்கான பொதுச் செயன்முறையானது குறைந்த பெரும் பான்மையாகும். உத்தியோகபூர்வ இணக்கம் தொடர்பான ஒழுங்குகள் உறுப்புரை 154H இலே சொல்லப்பட்டிருக்கின்றது.

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154H(1)-** மாகாண சபையொன்றினால் ஆக்கப்படும் ஒவ்வொரு நியதிச் சட்டமும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய நியதிச் சட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றதன் மேல் வலுவுக்கு வருதல் வேண்டும்.

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154H(2)-** மாகாண சபையொன்றினால் ஆக்கப்படும் ஒவ்வொரு நியதிச் சட்டமும் அது ஆக்கப்பட்டதன் மேல் உடனடியாக ஆளுநரின் சம்மதத்துக்கென அவருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆளுநர் ஒன்றில் நியதிச் சட்டத்திற்குச் சம்மதமளித்தல் வேண்டும். அல்லது நியதிச் சட்டம் சம்மதத்திற்கென அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இயலுமான விரைவில் நியதிச் சட்டத்தை அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டை மீளச் சீர்தூக்கிப் பார்க்கும் படி, குறிப்பாக செய்தியில் விதந்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய திருத்தங்களை உட்புகுத்தும் சாத்தியத்தை சீர்தூக்கிப் பார்க்கும்படி சபையை வேண்டுவதான ஒரு செய்தியுடன் சேர்த்து அந்நியதிச் சட்டத்தை மாகாண சபைக்கு திருப்பியனுப்புதல் வேண்டும்.

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154H(3) -** இரண்டாம் பந்தியின் (154H(2)) கீழ் ஆளுநரினால் நியதிச் சட்டம் ஒன்று மாகாண சபையொன்றுக்கு திருப்பியனுப்பப்படுகின்றவிடத்து, மாகாண சபையானது ஆளுநரின் செய்தியைக் கவனத்திற் கொண்டு நியதிச் சட்டத்தை மீளச் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும். அத்துடன் திருத்தத்துடன் அல்லது திருத்தம் இன்றி அத்தகைய நியதிச் சட்டத்தை நிறைவேற்றலாம் என்பதுடன் அதனை ஆளுநரின் சம்மதத்துக்கென அவருக்குச் சமர்ப்பிக்கவும் செய்யலாம்.

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154H(4)-** நியதிச் சட்டம் ஒன்று மூன்றாம் பந்தியின் 154H (2) ஆளுநருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் மேல், ஆளுநர் நியதிச் சட்டத்துக்கு சம்மதமளிக்கலாம் அல்லது அது அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக இல்லை எனத் தீர்மானிக்கப்படுவதற்காக இரண்டாவது தடவையாக நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள், ஜனாதிபதியினால் உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுவதற்கென அதனை ஒதுக்கலாம். அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட தன் மீது நியதிச் சட்டம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒத்துப் போகின்றதென உயர் நீதிமன்றம் தீர்மானிக்கின்றவிடத்து ஆளுநர் உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் அவருக்குக் கிடைக்கப்பெற்றதன் மீது நியதிச் சட்டத்திற்குச் சம்மத மளித்தல் வேண்டும். அவ்வாறு ஆற்றுப்படுத்தப்படுத்தப்பட்டதன் மீது நியதிச் சட்டம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாயிருகின்றதென உயர் நீதிமன்றம் தீர்மானிக்கின்றவிடத்து ஆளுநர் நியதிச் சட்டத்திற்கான சம்மதத்தை நிறுத்தி வைத்தல் வேண்டும்.

**சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்படுதல்**

ஒருங்கிணை நிரலில் பல நல்ல விடயங்கள் உள்ளன. அவ் விடயங்களில் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நியதிச் சட்டங்களை ஆக்கிக் கொண்டால் மாகாண சபைகளை திறம்பட நடத்த முடியும்.

மாகாண சபை நிரல், ஒதுக்கிய நிரல் மற்றும் ஒருங்கிணை நிரல் மூன்றிலும் உள்ள விடயங்களில் பல ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு காணப்படுவதால் பல சிக்கல் நிலையைத் தோற்விப்பதோடு, அவ்விடயங்கள் சம்பந்தமாக இயற்றப்படும் நியதிச்சட்டங்கள் எப்போதும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்படுகிறது.

மாகாண சபை உருவான ஆரம்பத்தில் நியதிச் சட்ட வரைபுகள் உருவாக்கப்படும் போது மாகாண சபைகளில் சட்ட அதிகாரிகள் இல்லாத காரணத்தால் அந் நியதிச் சட்ட வரைபுகள் சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து ஆலோசனை பெறும் ஒரு பாரம்பரியம் இருந்தது. இது ஒரு குறுகிய காலத்திற்கு தொடர்ந்தது. ஆனால் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி அன்றைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவினால் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

அதன் பிரகாரம் நியதிச் சட்ட வரை புகள் ஆளுநரின் ஒப்புதல் பெற அனுப்பப்படும் போது ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்குமுன் அதனை சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து அவரின் அனுமதி பெற வேண்டும். இவ்வாறு அச் சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இச் சுற்றறிக்கை எவ்வளவு தூரம் வலிதானது என்பது தெரியவில்லை.

**காணி விடயம் சம்பந்தமாக மாகாண சபைகளால் இயற்றப்பட்ட நியதிச்சட்டங்களும் அவற்றை நடைமுறைப்படுத்த ஏறபட்ட தடையும்.**

காணி விடயம் சம்பந்தமாக மாகாண சபைகளுக்கு சட்டம் இயற்றும் அதிகாரம் இருந்த போதும் இதுவரை மூன்று சட்டங்கள் மட்டுமே இயற்றப்பட்டுள்ளன. இரண்டு மாகாண சபைகள், அதாவது வடமத்திய மற்றும் மேற்கு மாகாண சபைகள் தமது மாகாணத்துக்கான காணி சம்பந்தமான நியதிச் சட்டங்களை நிறைவேற்றி ஆளுநர்களின் ஒப்புதல்களையும் பெற்றிருந்தன. இருப்பினும், இந்த சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை மத்திய அரசாங்கம் விரும்பவில்லை.

காணி ஆணை யாளர் நாயகம் சட்டமா அதிபரின் உதவியுடன் இந்நியதிச் சட்டங்கள் செயற்படுத்துவதை தடுத்து நிறுத்த அல்லது அளித்த பரிந்துரைகளில் தலையிட நடவடிக்கை எடுத்தார். இந்த நியதிச் சட்டங்களில் உள்ள சில விதிகள் அரசியலமைப்பு விதிகளுடன் முரண்படுகின்றன அல்லது அரசியலமைப்பு விதிகளை ஊடுருவுகின்றன என அரசாங்கத்தால் காரணம் கூறப்பட்டது. இயற்றப்பட்ட காணி நியதிச் சட்டங்கள் பற்றி கீழே தரப்பட்டுள்ளன.

1) வடமத்திய மாகாண சபையால் 1994 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 05 ஆம் இலக்க "காணி நியதிச் சட்டம்"

இந்நியதிச் சட்டம் மாகாண சபைக்கு கையுதிர்த்தல் (vested) செய்யப்பட்ட அரச காணியை நிர்வகித்தல், பயன்படுத்தல், கட்டுப்படுதல் போன்றவற்றுக்கான பொதுவிதிகளைப் பற்றி விளக்குகின்றது. இது மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அரச காணிகளை நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக பராதீனம் (alienation) செய்தல், அல்லது குறிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் விற்பனை செய்தல், குத்தகைக்குவிடல் அல்லது வேறு வழியில் கையுதிர்த்தல் (disposition) செய்தல், காணி உறுதிப்பத்திரம் வழங்கல், காணி மற்றும் பிற தொடர்புடைய பிரச்சினைகள் போன்ற விடயங்களைக் கையாள்கிறது.

இவ்விதிகள் (நடைமுறைகள்) ஏற்கனவே உள்ள அரச காணி கட்டளைச் சட்டத்துடன் (State Lands Ordinance) ஒத்திருக்கும் விதத்தில் உருவாக்கப்பட்டவையாகும். இச் சட்டம் வடமத்திய மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்ட போதும் செயற்படுத்தப்படுவது மத்திய அரசின் தல்லயீட்டால் இடை நிறுத்தப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டு குற்றச்சாட்டுகளில் இருந்து முன்னாள் பிரதி அமைச்சர் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவை, ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

அவருக்கு எதிராக 8 ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பான வழக்கு தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டபோது அவரை அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கடந்த 2007 அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக இருந்தபோது அதன் வாகனங்களை தனிப்பட்ட பாவனைக்கு உபயோகித்தமை தொடர்பில் முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்த்தன மீது 8 குற்றச்சாட்டுகளின் கீழ் இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவினால் வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இஷாலினியின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டது



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனினுடைய இல்லத்தில் வீட்டு வேலைக்கமர்த்தப்பட்டு தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்த சிறுமி இஷாலினியின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட மருத்துவ குழுவினர் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்



## தம்பதிகள் ஒற்றுமைக்கு உதவும் கேதார கௌரி



கேதாரம்' என்றால் 'வயல்' என்று பொருள். இமயமலையில் உள்ள வயலில் சிவபெருமான் சுயம்பு லிங்கமாக தோன்றினார்.

ஆதலால் அவருக்கு 'கேதர நாதர்' என்ற பெயர் ஏற்பட்டது. அம்பி கையின் பல நாமங்களில் 'கௌரி' என்பது ஒன்றாகும். அம்பாளை நினைத்து இருக்கும் இந்த விர தத்துக்கு 'கேதார கௌரி விரதம்' என்று பெயர் ஏற்பட்டது.

கேதாரகௌரி விரதம் தோன்றிய கதை சுவாரசியமானது.

ஆதி கயிலாயத்தில் சிவனும், பார்வதியும் தனித்தனியே வீற்றிருந்தனர். மகா விஷ்ணு, பிரம்மா, இந்தி ரன், முப்பது முக்கோடி தேவர்க ளும் சிவனையும், பார்வதியையும் தனித்தனியாக வலம் வந்து வணங்கி அரு ளாசி பெற்றுச் சென்ற னர்.

பிருங்கி முனிவர் என்பவர், சிவனை மட் டுமே வணங்கிச் சென்றார். அவர் சக்தியை வணங்குவதில்லை. தினமும் அவர், இவ் வாறு செய்வதை பார்த்த உமா தேவி வருத்தப்பட்டு அதற்கான காரணத்தை சிவபெருமானிடம் கேட்டார்.

'பிருங்கி முனிவர் மோட்சத்தை மட்டுமே கோரி வருவதால், என்னை மட்டுமே வணங்குகிறார்' என்று சிவன் கூறினார். இதையடுத்து சிவனும், பார்வதியும் பிருங்கி முனிவர் வழிபட வரும்போது சேர்ந்து அமர்ந்தனர்.

அப்போது பிருங்கி முனிவர் ஒரு வண்டின் உருவம் எடுத்து சிவனை மட்டும் சுற்றி வந்து வணங்கிச் சென் றார். இதனால் கோபம் கொண்ட உமாதேவி, பிருங்கி முனிவருக்கு சாபம் கொடுத்தார்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## போலி ஆவணங்கள் ஊடாக மோசடி

(கொழும்பு)

மோட்டார் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக போலி ஆவணங்களைச் சமர்ப்பித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திகன பகுதியில் உள்ள தனியார் மற்றும் அரச வங்கி கணக்குகளில் 28 இலட்சம் ரூபாய் பணம் இருப்பதாக வங்கி முகாமையாளரின் கையொப்பத்துடன் கூடிய வகையில் குறித்த ஆவணம் தயாரிக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

24 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாகனம் ஒன்றை கொள் வனவு செய்வதற்காக குறித்த நபர் இவ்வாறு போலி ஆவண ங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பத்தர முல்ல பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய மேலும் 113 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 113 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி இந்த குற்றச்சாட்டின்கீழ் 52,626 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5)

## 40 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

40 கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பண்டாரகம பகுதியில் வைத்து குறித்த நபர் 40 கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். குறித்த போதைப் பொருளின் பெறுமதி 40 கோடி ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 130 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 180 | 240 |
| தக்காளி | 80 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 40 |
| கோவா | 160 | 160 | 180 | 200 |
| கரட் | 170 | 170 | 200 | 200 |
| பூசணி | 80 | 70 | 80 | 120 |
| புடோல் | 80 | 70 | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 180 | 230 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 270 | 300 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 160 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 200 | 220 | 200 | 240 |
| பீற்றூட் | 140 | 130 | 140 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 260 | 320 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 250 | 120 |
| போஞ்சி | 250 | 300 | -- | 320 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | -- | -- | 280 | -- |
| வெங்காயப்பூ | 180 | 180 | 260 | 200 |
| முள்ளங்கி | 120 | 90 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 40-50 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சீலனின் தந்திரம்

"என்தாயின் மீது வைத்துள்ள பாசத்தால் தான் அந்த ஓவியத்தைக் கொடுக்கும்படிக் கேட்கிறேன்.

எனக்காக உங்கள் கொள்கையைக் கொஞ்சம் தளர்த்துங்கள்," என்று வேண்டினான்.

அவனுக்கு எப்படி உதவலாம் என யோசித்த சீலன், "சக்தி நீ உன் தாயின் மீது எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறாய் என்பது தெரிகிறது.

அதனால் உனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கிறேன். நான் ஓவியக் கலையில் ஓரளவு பயிற்சி பெற்றவன் என்பது உனக்கும் மற்றவர்களுக்கும் தெரியும்.

"அதனால் நீ கொடுத்த ஓவியம் போலவே நான் மற்றொரு ஓவியம் தீட்டுகிறேன்.

இதற்கு ஒருவார காலம் பிடிக்கும். இரண்டு ஓவியங்களில் எது முதலாவது வரையப்பட்டது என்று கண்டு பிடித்து உன் ஓவியத்தை எடுத்துச் செல். இந்தப் பரீட்சைக்கு நம் மன்னரே நடுவர்!" என்றான். சக்தி அதற்குச் சம்மதித்தான்.

சீலன் ஒரு வார காலத்தில் சக்தி கொடுத்த ஓவியம் போல மற்றொரு ஓவியத்தை வரைந்து விட்டான்.

இரு ஓவியங்களையும் அவன் குறித்த நாளன்று மன்னன் முன் கொண்டு போய் வைத்தான். அதேநாளில் அங்கு வந்தான் சக்தி.




அந்த இரு ஓவியங்களையும் பார்த்து விட்டு தான் சீலனுக்கு விற்ற ஓவியம் எது என்பதைக் கண்டு பிடித்துக் காட்டினான்.

"சக்தி! நீ வென்றுவிட்டாய். அதுதான் நீ எனக்கு விற்ற ஓவியம். அதனை நீ எடுத்துக் கொண்டு போகலாம்,"" என்றான்.

மன்னனும் அந்த இரு ஓவியங்களையும் மாறி மாறிப் பார்த்து விட்டு, "இரண்டு ஓவியங்களும் ஒன்று போலத் தானே உள்ளன. எப்படி ஓவியத்தைக் கண்டு பிடித்தாய்?" என்று கேட்டான்.

(தொடரும்)

# மகாபாரதம்




இல்லறம் துறந்து காடு செல்ல உனக்குச் சாத்திர அனுமதியில்லை. தேவரும் விருந்தினரும் மற்றவரும் இல்லறத் தாரையே சார்ந்திருக்கின்றனர்.

அவர்களைக் காப்பது உன்கடமையாகும். விலங்குகளும் பறவைகளும் கூட இல்லறத்தாராலேயே காப்பாற்றப்படுகின்றன. உனக்கு நான்கு வருண தருமமும் தெரியும்.

சத்திரிய தருமத்தை நீ நன்கு உணர்ந்திருந்தாலும் உனக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

முயற்சியும், தானமும், யாகமும் மக்களைப் பாதுகாப்பதும், நடு நிலைமையோடு நடந்து கொள்வதும் பகையை அழிப்பதும் அரசருக்கான கடமையாகும்.

செங்கோன்மைதான் அரசருக்கு உரிய மிக உயர்ந்த தருமமாகும். அரசன் குற்றவாளிகளைத் தண்டித்து நாட்டில் குற்றங்கள் பெருகாமல் தடுக்க வேண்டும்.

இதுவும் அரச தருமம் என்பதை புரிந்து கொள். சுத்யும்னன் என்னும் ராஜரிஷி ஒழுங்காக செங்கோல் செலுத்தியதால் முக்தியடைந்தார் என்பதைத் தெரிந்து கொள்" என்றார்.

தருமர் சுத்யும்னன் எப்படி முக்தியடைந்தார் என வியாசரைக் கேட்டார்.

வியாசர் சொல்லத் தொடங்கினார். முன்னொரு காலத்தில் சங்கர், லிகிதர் என இரு சகோதரர்கள் இருந்தனர். இருவரும் தவத்தில் சிறந்தவர்கள்.

அவர்களுக்கு பாகுதை என்னும் நதிக்கரையில் மரங்களால் சூழப்பட்ட ஆசிரமங்கள் தனித் தனியாக இருந்தன.

ஒரு சமையல் லிகிதர் சங்கரின் ஆசிரமத்திற்கு வந்தார். சங்கர் அப்போது வெளியே சென்றிருந்தார்.

லிகிதர் மரத்தில் நன்கு பழுத்திருந்த கனிகள் சிலவற்றை பறித்து உண்ணத் தொடங்கினார். திரும்பி வந்த சங்கர் தம்பியின் செயல் கண்டு கோபமுற்றார். "என் அனுமதியின்றி பழங்களைப் பறித்தது திருட்டுக் குற்றம். இக் குற்றத்திற்கான தண்டனையை இந்நாட்டு மன்னனிடம் பெற்று அத் தண்டனையை அனுபவிப்பாயாக" என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயற்சி செய். உண்மையாயிருக்க மட்டுமே உழைத்திடு.

~ ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒவ்வொரு அசைவிலும் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்

வடக்கு கிழக்குக்கு வழங்கப்பட்ட சினோபார்ம் கொரோனாத் தடை மருந்து தொடர்பில் நேற்றைய தினம் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நிர்வாகம் சார்ந்த மருத்துவர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மேற்போந்த ஆசிரியர் தலையங்கம் சினோபார்ம் தடை மருந்தேற்றுவதில் மக்களிடையே எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கூறியிருந்தார்.

பிரஸ்தாப மருத்துவர் கூறிய கருத்து அவர் சார்ந்த பதவி நிலைக்குரியதாக இருக்கலாம்.

ஆனால் நாம் கூறிய விடயத்தை நடுவு நிலை நின்று பார்க்கும்போதுதான் அதன் உண்மைத்தன்மை புரியவரும்.

பொதுவில் மருத்துவர்களின் கருத்து என்பது குறித்த மருந்து தொடர்பில் அதன் தயாரிப்புத்துறை சார்ந்தவர்கள் வெளியிடுகின்ற விளக்கக்குறிப்பை அடியொற்றியதாக இருக்கும்.

மற்றும்படி கொரோனாத் தடை மருந்தை எடுத்து; ஆய்வுகூடப் பரிசோதனைகளை மேற்கொண்டு, அதிலிருந்து கண்டறியப்பட்ட முடிவுகளை வைத்துக் கொண்டு கருத்துரைப்பதில்லை என்பதை முதலில் நாம் கூறியாக வேண்டும்.

எனவே கொரோனா உள்ளிட்ட எந்த நோய்க்கான தடை மருந்தாக இருந்தாலும் அதனைப் பொதுமக்கள் ஏற்ற வேண்டும் எனக் கருத்துரைக்கும்போது அது தொடர்பில் உரிய விளக்கங்களையும் உத்தரவாதங்களையும் வழங்கக்கூடிய பொறுப்பு நிலையில் நின்று கொண்டு, கருத்துரைப்பதுதான் மருத்துவர்களின் உயர்பணியாக இருக்கும்.

கொரோனாத் தடை மருந்து தொடர்பாக அண்மையில் தமிழ்நாட்டு மருத்துவர்களின் கருத்துக்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக பகிரப்பட்டன.

அதில் மருத்துவர்கள் சார்பில் ஒரு தரப்பினர் கொரோனாத் தடை மருந்துக்கு ஆதரவாகக் கருத்துரைக்க; இன்னொரு தரப்பினர் கொரோனாத் தடை மருந்துக்கு எதிராகத் தர்க்கம் செய்தனர்.

இதில் சென்னைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஓய்வுநிலை விரிவுரையாளர் மருத்துவர் காந்தராஜ் அவர்களும் ஒருவர்.

ஆக, ஒரு கருத்து எழும்போது அதற்கு எதிரான கருத்தும் எழுகைபெறும் என்பதை கற்ற சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே எம்மைச் சார்ந்து நடக்கின்ற அத்தனை அசைவுகளிலும் நாம் கண்ணும் கருத்துமாக இருப்பது மிக மிக அவசியம்.

இல்லையேல் அத்திப்பட்டி கிராமத்துக் கதைபோல எங்கள் நிலையும் ஆகிவிடும். கவனம்.

## திகடசக்ர நடத்தும் 50 ஆவது கிணத்தடி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திகடசக்ர எனும் இணையவழி முகநூல், வலையொளித்தள அமைப்பு நடத்தும் 50 ஆவது கிணத்தடி நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நேரலையாக இடம்பெறவுள்ளது.

இதில் தமிழ் மக்களின் அடையாள சொத்தாக விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தை மையமாக வைத்து யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தன் சமூக பொறுப்பை பெரிதும் நிறைவேற்றி வருகிறது / இல்லை என்ற தலைப்பில் இந்த விவாதம் இடம்பெறவுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வின் நடுவராக கலாநிதி "செஞ்சொற்செல்வர்" ஆறு. திருமுருகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சமூக சேவையாளர் மரியம்பிள்ளை செல்வின், முதுநிலை பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி, யாழ் பல்கலை விரிவுரையாளர் கோசலை மதன், யாழ். பல்கலை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா, சிரேஷ்ட பொறியியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான திருநாவுக்கரசு தயந்தன், பிரபல மருத்துவர் நடராஜா பிரபு போன்றோர் பங்குபற்றவுள்ளனர். இந்நிகழ்வை "Thigada Chakra" எனும் Facebook, You tube தளங்களின் ஊடாக பார்வையிடலாம். (ம-3)

## இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2021 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கலைத்துறை மற்றும் வணிகத்துறை மாணவர்களுக்கான செயலட்டைகள் வழங்கல், கருத்தரங்கு நடத்தல், மாதிரிப் பரீட்சை நடத்தல் போன்ற செயற்திட்டங்களை வடமாகாண கல்வி அமைச்சின் அனுமதியுடன் தமிழி அமைப்பு மற்றும் ஆறுதல் நிறுவனம் இணைந்து இலவசமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கு இச்செயற்திட்டங்கள் பாடசாலைகளூடாக கொண்டு சேர்க்கப்படும். இது தொடர்பாக தேவைகள் உள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன் தமிழி அமைப்பை அல்லது ஆறுதல் நிறுவனத்தை தொடர்பு கொண்டால் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றத் தேவையான உதவிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3)

## மாதாந்த கோவிட் மரணங்கள் 4000 - 4500 வரையில் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

தற்போது இனங்காணப்பட்டுள்ள கோவிட் தொற்றாளர்களில் 50 சதவீதமானவர்களுக்கு ஒக்ஸிஜன் தேவைப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடக குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அவர்களுள் அதிகமானவர்களுக்கு டெல்டா வகை வைரஸின் அறிகுறிகள் காண்பிக்கப்படுவதாக சந்தேகிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாதம் ஒன்றிற்கான கோவிட் மரணங்கள் 4000 - 4500 வரையில் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் கூட இவ்வாறு உயிரிழப்புக்கள் இடம்பெறவில்லை எனவும் மக்கள் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

ஹெரோயின்போதைப் பொருளை வைத்திருந்த இளைஞர் ஒருவர் காங்கேசன்துறை போதைப் பொருள் தடுப்பு பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் துன்னாலை பகுதியில் காங்கேசன்துறை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நின்ற இளைஞர் ஒருவரை சோதனையிட்ட போது அவரிடம் 40 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து கைது செய்யப்பட்ட அவர் நெல்லியடி பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (ம-3,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 01 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 11 இ.எஸ்.ஆர். இராணுவமுகாம், நந்திக்கடல், 12 சி.எல்.ஐ. நந்திக்கடல். 16 இ.எஸ்.ஆர். நந்திக்கடல், வற்றாப் பளை 59 ஆம்பிரிவு இராணுவ முகாம், 6 ஆவது எஸ்.எல்.ஏ.சி இராணுவமுகாம் நந்திக்கடல், விமானப் படை முகாம் 2 வற்றாப்பளை, விமானப்படை முகாம் வற்றாப்பளை, இராணுவமுகாம் எரிபொருள் நிரப்பு நிலையம் வற்றாப்பளை எப்.எம்.ஏ, (எம்.எல்.டி) இராணுவமுகாம் நந்திக்கடல், குமுழமுனை பாடசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை குமுழமுனை, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் முல்லைத்தீவு, முல்லைத்தீவு மருத்துவமனை (மாஞ்சோலை), வற்றாப்பளை விசேட அதிரடிப்படை தலைமையகம், குமுழமுனை டயலொக் கோபுரம், கேப்பாப்பிலவு வற்றாப்பளை, கேப்பாப்பிலவு கிராமம், குமாரபுரம், குமுழமுனை, மாமூலை நீர்வழங்கல் சபை, மாமூலை, முள்ளியவளை மொபிடல் கோபுரம், பழுப்பாணி- முறிப்பு, பிலாக்குடியிருப்பு, பொன்னகர் முள்ளியவளை, பூதன்வயல், தண்ணீரூற்று •(கணுக்கேணி), தண்ணிமுறிப்பு, முள்ளியவளை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சமணங்குளத்திலும்

**மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கீரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரி வளாகம், மன்னார் மருத்துவமனை, மன்னார் நீர் வழங்கல்சபை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கடற்படை முகாம், ஓலைத்தொடுவாய், புதிய சில்க்ரோடு அகுடிக் கம்பனி பிறைவேட் லிமிட்டட் (கடல் உணவுக் களஞ்சியம்) பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ்- தலைமன்னார் பல்மெய்ரா ஹவுஸ், தப்ரபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார் வைத்தியசாலை, தலை மன்னார் கடற்படைமுகாம், ரைமக்ஸ் ஆடை, வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நீர்வழங்கல்- தோட்டக்காடு, இளைஞர் படை பயிற்சி மையம்கார்கில்ஸ் பூட் சிட்டி, மன்னார், இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார், தள்ளாடி டயலொக், நடுக்குடா, பேசாலை- ஐஸ் தொழிற்சாலை, கொன்வென்ட் வீதி, எழுத்தூர், எமில்நகர், எருக்கலம்பிட்டி, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி 4 ஆவது மைல்கல், ஜோசப்வாஸ் நகர், கடலேரி வீதி, கட்டுகாராங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, மன்னார் நகரம், மூர் வீதி, முள்ளிப்பள்ளம், நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), ரைமக்ஸ் ஆடையகம் அருகில், இளையோர் சேவை மையத்தடி, ஓலைத்தொடுவாய், ஒல்லிமோட்டை, படப்பாடி நீர்வழங்கல், பள்ளிமுனை, பருத்திப் பண்ணை, பாவிலுப் பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு, பகையிரத நிலையம்- சாந்திபுரம், சிலாவத்தை முகாம் சந்தி, சிறுநா வற்குளம், சிறுதோப்பு, சவுத்பார் இராணுவமுகாம், மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்ரியன் தேவாலயம், சணி கிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தர வன்கொட்டு, தோட்டவெளி, துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், மன்னார் யுசி மைதானம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—316

## பஞ்சத்தை தவிர்க்கும் திறனுள்ள எம்மவர் மனைப் பொருளாதாரம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது முன்னோர்கள் வழிசமைத்து வாழ்ந்தும் காட்டியதை நாமும் வாழக் கொடுத்து வைத்திருக்கின்றோம்.

இந்த வாழ்க்கை பொன்னானது. அதனை பலரும் உணர்ந்து கொள்வதில்லை. தற்கால விஞ்ஞான தொழில்நுட்ப வாழ்க்கைக்குள் எம்மை நாம் சிறை வைத்து எமது அன்றாட தொழில்களைக் கூட குனிந்து நிமிர்ந்து வளைந்து செய்வதில்லையென ஒவ்வொரு வீட்டிலிருக்கும் வயதானவர்கள் தினமும் சலித்துக் கொள்வார்கள்.

இந்த மாதிரி வசதி வாய்ப்புக்கள் அதிகமில்லாத காலத்திலும் குடும்ப நெருக்கம், தினமும் வீட்டு வேலைகளைச் செய்யும் வழக்கம், கூடியிருந்து கலகலப்பாக வேலைகளை பங்கிட்டு செய்யும்பாங்கு, தன்னையே சிந்தியாது குடும்ப மகிழ்ச்சி பற்றி அதன் தேவை பற்றி அனுதினம் சிந்திக்கும் தன்மை இவையனைத்தும் ஒவ்வொரு மனிதனையும் அக்காலத்தில் மகிழ்ச்சியாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருந்தன என்பது உண்மையே.

மீண்டும் அந்த வாழ்க்கைக்கு மீண்டு செல்ல பலருக்கும் விருப்பம் வந்திருக்கின்றது. கொரோனாவினால் தீமைகள், இறப்புக்கள் என ஒரு பக்கமிருக்க நன்மைகள் பலப்பலவுண்டு.

. குடும்பமாக கூடியிருந்து அளவளாவுவதற்கு இப்படியொரு மிரட்டும் வைரஸ் தேவையாயிருக்கின்றது பார்த்தீர்களா?

கொரோனா வைரஸ் அவரவர் குடும்ப பொருளாதாரத்தைப் பற்றி சிந்திக்க வைத்திருக்கிறது. இப்படியொரு கண்ணுக்குத் தெரியாத நுண்ணங்கிக்கு இத்துணை ஆற்றல் எப்படி வந்தது? குடும்ப பொருளாதாரத்தை மட்டுமல்ல தேசத்தின் உலகத்தின் பொருளாதாரத்தை அசைத்தும் பார்த்திருக்கின்றது.

பல நாடுகளில் தொழிற்றுறையில் பாரிய பாதிப்பு, வர்த்தகத்தில் வீழ்ச்சி மட்டுமல்ல விமானங்கள் அசைய முடியாது அந்தந்த நிலையங்களிலேயே தரித்து நிற்கின்றன. இதனை எவரும் எப்படி கட்டளை போட்டும் செய்ய முடியாது.

போக்குவரத்தே ஸ்தம்பிதமாகும் அளவுக்கு நிலைமை மோசமடைந்ததைக் கவனித்தீர்களா? நாமே அதனைப் பரப்பி நம்மையே இலக்கு வைத்திருக்கும் நிலைமையை என்னவென்பது?

அனைத்திற்கும் மேலாக தற்போது மத்திய சீனாவில் செங்சூ மாநகரில் கொட்டித் தீர்த்த கனமழை கடந்த 100 வருடங்களில் பெய்யாத மழையெனவும் வருடம் முழுவதும் பெய்யும் மழை மூன்று நாட்களில் தொடர்ச்சியாக கொட்டித் தீர்த்திருக்கின்றது மட்டுமல்லாது பலத்த அழிவுகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

கால நிலைமாற்றத்தின் பிரதிபலிப்புக்களில் மனிதனுக்கு இயற்கை கற்பிக்கும் பாடங்களில் இதுவுமொன்று.

இங்கே ஆடியிலும் மழை பெய்கின்றது. ஆச்சரியப்பட்டுப் போனதைவிட அறுவடைக்குத் தயாராகும் சிறுபோகத்து நெல் மற்றும் மரக்கறிக் பயிர்கள் மழையால் அவதிப்பட்டிருக்கின்றன.

விவசாயப் பெருமக்களுக்கு இந்த இழப்பும் அதிகமான பாதிப்பாக காணப்படுகின்றது. ஆனாலும் சூழல் குளிர்ந்திருக்கின்றது. இது உலர் வலயமல்ல என்பதற்கு தற்போது விடை கிடைக்கத் தொடங்கியிருக்கின்றது. இதனால் எமது பயிர்ச்செய்கையில் மாற்றங்களை கொண்டு வருவது அவசியமானதாகின்றது. கால போகம் சிறுபோகம் என்னும் காலக் கணிப்புக்கள் கால நிலை மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றது தற்போது அனுபவத்தினூடாக அறிய முடிகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டு இந்நிலையில் தினமும் இறப்புக்களைப் பார்க்கும்போது கொரோனாவின் தாக்கம் அலை அலையாக வரத் தொடங்கியிருக்கின்றதனை அவதானிக்கலாம். இனி கொரோனாவுடன் நாமும் இணைந்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அவ்வப்போது வெகுண்டெழுந்து பயப்பீதியடைய வைத்தாலும் மக்கள் தற்போது அதனுடன். வாழப்பழகத் தொடங்கி விட்டார்கள். மக்கள் பொறுப்புணர்வுடன் சுகாதார நடைமுறைகளை அவசியம் கடைப்பிடித்தால் இதனை வெற்றிகரமாக தொடர்ந்தும் பரவ விடாது அனைவரையும் இந்த பேரிடரிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

இங்கே ஒவ்வொரு மனிதனினதும் முழுமையான பங்களிப்பு மிகவும் அவசியமாகின்றது. கொரோனா திரிபடைந்து டெல்டா என வீரியமாக வெகுண்டெழுந்து வருவதனையும் செய்திகள் கோடிட்டுக் காட்டியிருக்கின்றன.

இருப்பினும் எமது வாழ்க்கையை நாம் நகர்த்துவதற்கு எமது உணவின் உற்பத்தியைப் பற்றியும் எமது குடும்ப பொருளாதாரத்தை நிலையானதாக மாற்றுவதற்கும் வழி வகைகளைக் கண்டாக வேண்டும்.

வாழ்வாதாரத்தில் நலிந்து போயிருக்கின்ற மக்களை முன்னிலைப்படுத்தி செயற்றிட்டங்கள் அவசியம் நகர்த்தப்படல் வேண்டும்.

உலக உணவு மற்றும் விவசாய தாபனம் இவ்வருடத்தில் கொரோனாவின் பாதிப்பின் விளைவாக பஞ்சம், பட்டினி என்பன உலக மக்களை வாட்டியெடுக்க வைத்து விடும் என கட்டியங் கூறியிருக்கின்றார்கள்.

இது மிகவும் முக்கியமான செய்தி. இதில் முக்கியமாக பாதிப்புக்குள்ளாக இருக்கும் ஆபிரிக்க நாடுகளை இனங்கண்டும் வைத்திருக்கின்றார்கள்.

இப்போதே அந்த நாடுகளில் பஞ்சம் தலைவிரித்தாடத் தொடங்கி மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்னும் செய்தி எமக்கான அறிவுறுத்தலாகக் கொள்ள வேண்டும்.

எமது மக்களை நாம் உணவுப் பட்டினி மற்றும் பஞ்சத்திலிருந்து பாதுகாப்பதற்கு எமது மனைப் பொருளாதாரத்தை நிலையானதாக வைத்திருக்க வழி செய்து கொடுத்தல் அவசியமானதாகும்.

எம்மவர்களின் மனைப் பொருளாதாரம் எம்முடைய வாழ்வியலில் முக்கியமான பங்களிப்பை செலுத்துகின்றது என்பதனை நாம் அறிவோம். எமது உற்பத்தி, எமக்கான உணவு, ஊட்டச்சத்தான உணவு மற்றும் குடும்ப வருமானம் என நாம் கவனம் செலுத்தும் போது எமது மனைப்பொருளாதாரம் விருத்தியடைவதற்கான வழிவகைகளை நாம் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

காலங்காலமாக எமது மக்களின் உற்சாகமான பங்களிப்பு எமது உணவுத் தேவையை ஓரளவிற்கேனும் பூர்த்தி செய்ய வைத்திருக்கின்றதனை நாம் உணர்ந்து கொண்டால் எமது மனைப் பொருளாதாரத்தில் வீழ்ச்சியேற்படாத வண்ணம் அனைத்து குடும்பங்களுக்குமான வாழ்வாதார உதவிகள் அவர்களாக உற்பத்தி செய்து அதனை இலகு வழியில் சந்தைப்படுத்தும் பொறிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படல் அவசியமானதாகும்.

இதற்காக மாகாண மட்டத்தில் அல்லது மாவட்ட மட்டத்தில் சிறப்பான திட்டங்களை முன்னெடுக்கலாம். மனைப் பொருளாதாரத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான அடிப்படை உதவிகள், வசதிகள் செய்து கொடுக்கும் போது இன்னும் அதனை வலுவுள்ளதாக்கி அதன் மூலம் மக்கள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகுக்கும்.

மனைப்பொருளாதாரத்தில் அந்த மனையின் உற்பத்தி கணிசமான பங்கினை பெற்றுக் கொடுக்கும். தினமும் வேலை செய்து அந்த வருமானத்தில் மனைத் தேவைகளை பூர்த்தி செய்யும் மக்களுக்கு இந்த மாற்றம் நிச்சயம் கைகொடுக்கும்.

மனையில் உணவையும் ஊட்டச்சத்தையும் இன்னும் வருமானத்தையும் ஈட்டித் தரும் மனைத் தோட்டத்தை ஏற்படுத்தினால் இன்னும் ஏற்படுத்துவதற்கு உதவிகள் புரிந்தால் அந்தக் குடும்பம் ஆர்வமாக அதிலீடுபட்டு தமது மனைக்கான வருமானத்தை எப்பாடுபட்டும் ஈட்டிக்கொள்ளும்.

வரவு-செலவு என்பதற்கும் மேலாக தமக்கான உணவை உண்பதற்கான வாய்ப்பினையும் அதில் அதிகமாக உற்பத்தியாவதை விற்பனை செய்வதற்காக வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்போது பெறப்படும் வருமானம் அவர்களது ஏனைய தேவைகளை ஓரளவிற்கேனும் பூர்த்தி செய்யும்.

மனை வேளாண்மையில் உணவுப்பயிர்கள் தவிர்த்து கால்நடைகளுக்கான தீவனம் பயிர்கள் மற்றும் விற்பனைக்கு என பணப்பயிர்கள் குறுகிய நிலத்திலும் உற்பத்தி செய்யலாம். சிறுகக் கட்டிபெருகவாழ் என்பதனை எமக்கான மனைப்பொருளாதாரத் தத்துவமாக நாம் வரித்துக் கொள்ளுவோம்.


அனைவரும் இணைந்து மனையின் உற்பத்திக்கு பாடுபட வாய்ப்புக்கள் தற்போது அதிகமே. இந்த சந்தர்ப்பத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளல் தகும். மக்களுக்கு சேமிப்பு பற்றி இன்னும் புரிய வைத்தல் நன்று.

அதன்மூலம் அவர்களை பலமான குடும்பங்களாக மாற்ற வழிவகை செய்யலாம். ஒவ்வொரு குடும்பமும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்களை அலசி ஆராய்ந்து அவற்றை செய்வதற்கான உதவிகளையும் வழங்க முடியும்.

ஆக மொத்தத்தில் ஒவ்வொருவரின் பங்களிப்பும் மனைப் பொருளாதாரத்தை சிறப்புக்குள்ளாகுவதில் கவனம் செலுத்தினால் தேவையேற்படின் அது பற்றிய பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் மனைப்பொருளாதாரத்தை ஒவ்வொரு குடும்பமும் நிலை நிறுத்த பாடுபடும்.

இதன்மூலம் எமது மக்களின் உணவுப் தேவையை அவர்களாகவே உற்பத்தி செய்து பூர்த்தி செய்யும் நிலைக்கு மாற்றிவிடலாம். இது அவர்களின் மனைப் பொருளாரதார விருத்திக்கு என்றும் வித்திடும்.

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 329**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில் மேலும்...

அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4,380 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 38 ஆண்களும், 18 பெண்களும் அடங்குவதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## அரச நிறுவனங்...

தும் ஜனாதிபதி தலைமையிலான கோவிட்-19 குழு கவனம் செலுத்தியுள்ளது.

தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கோவிட்-19 ஒழிப்பு சிறப்பு குழுவுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் கோவிட்-19 நோயாளர்கள் மற்றும் உயிரிழந்தவர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கேற்ப, அவர்களில் சுமார் 95 சதவீதமானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (ம-3)


தன நிதானய
திகதி - 2021.07.30
சீட்டிழுப்பு இலக்கம் - 551
P 22 42 48 79
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 30.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2816
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
F 17 20 22 75
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/07/30
சீட்டிழுப்பு இலக்கம் 4521
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
J 9 9 4 3 0 1
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/07/30 1605 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 07 24 33 61
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

சம்பத லக்ன வரம
திகதி 30/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 04
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
M 2 0 4 5 1 5
மேடம் 17 37 84
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0869
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
J 05 24 26 78 79


## கொரோனா...

தெரிவித்துள்ளது.

கோவிட் ஒழிப்பு விசேட குழுவினருடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

கோவிட் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் தொடர்பான தகவல்களை கண்டறிந்து, அவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துமாறு ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

கோவிட் தொற்றாளர்கள் மற்றும் தொற்றால் உயிரிழப்போரில் ஏறக்குறைய 95% கோவிட் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் என்று தெரியவந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## 9 பொலிஸா...

இதனையடுத்து சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மேலதிக நடவடிக்கையை சுகாதாரத் தரப்பினர் எடுக்கவுள்ளனர். (ம-3)

## 2,455 பேருக்கு...

அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 306,657 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## மேலும் ஒருவர்...

கோவிலடியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரே நேற்று உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 127ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3,33)

## 25 மாணவர்...

வர்களுடன் விடுதியில் தங்கியிருந்த 64 மாணவர்கள் கல்லூரியிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் தாதிய பயிற்சி மாணவர்கள் 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் தொற்றுக்குள்ளானவர்களுடன் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களை வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனாலும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் தீர்மானத்திற்கமைய அவர்களை விடுதிகளிலேயே தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனிமைப்படுத்தப்பட்டுள்ள தாதிய மாணவர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது டன், இவர்கள் தடுப்பூசியின் 2 டோஸ்களையும் பெற்றவர்கள் என கூறப்பட்டுள்ளது. (ம-3)

## 34 பேருக்கு...

குழந்தைகள் இருவர் உட்பட 34 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒரு வயதுடைய பெண் குழந்தைகள் இருவர், ஐந்து வயதுடைய பெண் சிறுமி உட்பட்டவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## வட மாகாணத்...

ள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 60 பேரும் யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் 20 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 517 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த 42 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 60 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

யாழ்.மாவட்டத்தில் 42 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 03 பேர், வவுனியா மாவட்டத்தில் 02 பேர், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர், யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 208 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த 20 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## 4 தமிழ் அரசியல்...

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த நடேசன் தருமராசா, வவுனியாவைச் சேர்ந்த ஜோசப் செபஸ்ரியான், கிளிநொச்சியை சேர்ந்த நடராசா சர்வேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கண்ணதாசன் ஆகியோரே மேற்படி விடுதலை செய்யப்பட்டவர்களாவர். (ம-3,33)

## சரத் வீரசேகர...

இரண்டு நிறுவனங்கள், உடன் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்படி அமைச்சர் வீரசேகரவின் கீழிருந்த சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பல்சேவை அபிவிருத்தி படையணி திணைக்களம் ஆகியவற்றையே ஜனாதிபதி மீளப்பெற்றுள்ளார்.

இந்த நிலையில் அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு மீதமிருப்பது இலங்கை பொலிஸ் மற்றும் தேசிய பொலிஸ் அப்பியாச நிறுவனம் ஆகியன மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)


விளம்பரம் தொடர்புகளுக்கு 011 221 7603, 071 567 1532


## யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட பீடாதிபதிக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகள் பீடத்தின் பீடாதிபதிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த பீடாதிபதிக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த 88 பேருக்கு நேற்று பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவர்களில் ஒருவருக்கு மட்டும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## வழிமறித்து...

இற்கு மேற்பட்டவர்களிடம் பிசிஆர் பரிசோதனை முன்னெடுத்திருந்தனர்.

அதன் முடிவுகள் நேற்று வெளியாகிய நிலையில் 22 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்மூலம், தென்பகுதியில் இருந்து வடக்கிற்கு பிரவேசிப்பவர்கள் ஊடாக கோவிட் பரவல் அடைந்து வருகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3,250)


அத கோடிபதி
தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல. 1324
வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 30.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,814,570
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
07 16 29 40 R

சனிதா
தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல. 3659
வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 30.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,355,136
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
05 07 25 60 B

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,569,700/=
திகதி 30.07.2021
வெற்றி இலக்கங்கள் கும்பம்
18 41 46 59
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,234,100/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1498 நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 30/07/2021 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
H 63 65 67 74
அடுத்த சுப்பர் ஜக்பொட 61,091,581/=

ஜய
737
பச்சை
30.07.2021
வெள்ளிக்கிழமை
W 35 47 54 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,557,855


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த கண்ணதாசன் நேற்று விடுதலை

## வவுனியா மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டார் என்ற குற்றத்திற்காக ஆயுட்தண்டனை விதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் நுண்கலைத் துறை விரிவுரையாளர் கண்ணதாசன் வவுனியா மேல் நீதிமன்றினால் நேற்று விடுவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் மஞ்சுளா விஜயபாலன் எனும் சிறுமியை 2007 ஜனவரி மாதமளவில் கட்டாயமாக விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்த்ததாக அவருடைய தாயார், கண்ணதாசன் மீது 2014 மார்ச்சில் வழக்கு தொடுத்தார்.

அடுத்த ஆண்டே பயங்கரவாத விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கண்ணதாசன், பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார்.

அதனடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக, பலவந்தமாக ஆட்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விரிவுரையாளர் கண்ணதாசனுக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கில் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு 2017ஆம் ஆண்டு அவருக்கு வவுனியா மேல் நீதிமன்றினால் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அந்த மேன்முறையீட்டு மனு மீது இரண்டு ஆண்டுகளாக விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில் 2020 ஜுலை 22ஆம் திகதி அவரது ஆயுள் தண்டனையை இரத்துச் செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப் பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுக்க அனுமதியளித்திருந்தது.

இந்த நிலையில் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்கு வவுனியா மேல் நீதிமன்றில் மீளவும் ஒப்படைக்கப்பட்டது. இந்த் வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது. வழக்குத் தொடுனரான சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி, குற்றப்பத்திரிகையில் திருத்தம் செய்ய விண்ணப்பம் செய்தார்.



கண்ணதாசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார். வழக்குத் தொடுனர் தரப்பு விண்ணப்பத்தை நிராகரித்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், எதிரியை விடுவித்து விடுதலை செய்து கட்டளையிட்டார்.

(ம-03,33,299)

# வாளுடன் கைதானவர் விளக்கமறியலில்

(அராலி)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வாளுடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நேற்றைய தினம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டவேளை, எதிர்வரும் 10 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

(ம-03,104)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் கட்டட நிறுவனம் ஒன்றுக்கு மேசன், கூலி வேலையாட்கள் தேவையாக உள்ளது.
யாழ். நகரில் எப்பகுதியிலும் வேலை செய்யக் கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது.
மதிய போசனத்துடன் நாள் ஒன்றுக்கு
மேசன் : 2000/=
கூலி : 1500/= வழங்கப்படும்.
(7497)
தொடர்புகளுக்கு
076 578 2957 | 021 222 2964

## வேலையாட்கள் தேவை

காட்வெயார், மாபிள் வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் சீமெந்து வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
கிளிநொச்சியில் இருந்து 10 Km இற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
திங்கள் முதல் சனி வரை காலை 10.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை. நேரில் வரவும்.
சம்பளம் அனுபவம், திறமைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.
குரு காட்வெயார்
இல. 175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
077 743 5265
(C-2441)

## AGX

ஏற்றுமதியாளர்கள்
ஆகாய, கடல் மார்க்கமாக
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
கனடா 650/=
லண்டன் 975/=
(C-2386)
இல. 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 443 1578

## விற்பனைக்கு

குளிர்சாதன பெட்டி விற்பனைக்கு
3' * 1 1/2' D நல்ல நிலையில் உள்ளது. (தட்டாதெரு சந்தி பத்திரிகை கடையில் எந்த நேரங்களிலும் பார்வையிடலாம்.)
(7500)
077 939 3634

## அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-2384)
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை சுழிபுரம் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-2383)
0768226240 DHL


# மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 03 . 1954



இறப்பு 29 . 07 . 2021

## திரு. செல்லத்துரை தர்மராஜன்

(யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஓய்வுபெற்ற கணிதபாட ஆசிரியர்)

பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தர்மராஜன் நேற்று முன்தினம் *(29.07.2021)* வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் செல்லத்துரை - குணமணி தம்பதியரின் அன்பு மகனும் சாந்தினிமாலாவின் (ஆசிரிய ஆலோசகர் யாழ். வலயம்) அன்புக் கணவரும் சீர்மாறன் (HNB வங்கி), மதுரா (ஆராய்ச்சி உதவியாளர், மாணவி - பேராதனை ), கீர்த்திகன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், பூநகரி பிரதேச சபை), அபிநயன் (பல்கலைக்கழக மாணவன் -மொறட்டுவ) ஆகியோரின் அன்புத் தந்தையும் தபஸ்வியின் அன்பு பேரனும் சிறிதரனின் (ஜேர்மன்) அன்புச் சகோதரரும் அனுஷா (HNB வங்கி), சுஜிந்தன் (சுதேச மற்றும் ஆயுர்வேத மருத்துவ அபிவிருத்தி அலுவலர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரேவதி (ஜேர்மன்), காலஞ்சென்றவர்களான ரவிந்திரன், மகேந்திரன், மற்றும் ரஜனிமாலா (வவுனியா), தர்சினிமாலா (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் துஷாந்த், துக்ஷா, துவிஷா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை *(01.08.2021)* ஞாயிற்றுக்கிழமை காலை *9.00* மணியளவில் வண்ணார்பண்ணை இந்து மயானத்தில் சுகாதார முறைப்படி தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2442)

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## சுப்பையா தில்லையம்பலம்

பிறப்பு : 28.08.1924
இறப்பு : 29.07.2021

யாழ். கொட்டடியை பிறப்பிடமாகவும் யாழ். பிரப்பங்குளம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தில்லையம்பலம் நேற்று முன்தினம் *(29.07.2021)* வியாழக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - பவளம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்புக் கணவரும் சிவப்பிரியா (Engineer - சிங்கப்பூர்), சிவதர்சினி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரன் (Engineer - சிங்கப்பூர்), அகிலன் (Sales Head- இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், கனகேஸ்வரி, கனகலிங்கம், கதிரேசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனுஜா, யதுஷனா, பிரணவ், துருவ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(31.07.2021)* சனிக்கிழமை காலை *10.00* மணியளவில் கொழும்பு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(7503)

சிவப்பிரியா (மகள்)
தயாபரன் (மருமகன்)

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.